THE "VAKIL"—TAMIL LAW MONTHLY

670

"வக்

670
3-50.

பொது மக
புதிய சட்டங்களை
விதிகளையு
விமர்சனங்
விளக்கும்

இந்த இதழில்

குடிவார பாத்திய ரயத்து
பாதுகாப்பு சட்டத் திருத்தம்

இன்ஷ்யூரன்ஸ் சட்டத்
திருத்தம்

வழக்கும்—தீர்ப்பும்

கேள்வி - பதில்

உணவுதானியத் தீவிரக்
கொள்முதல் உத்தரவு
'லெவி' கொள்முதல் உத்தரவு

கண்ட்ரோல் உத்தரவுகள்

ஜாகை-வாடகை சட்டத்
திருத்த மசோதா

தமிழ் மாதப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 AUG 1950
MADRAS

K700

THE "VAKIL" ~ ஆகஸ்டு-1950 ~ 4 அணா

போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

ஆர். & கோ.,

பகோணம்.

REGISTERED TRADE MARK

பிராஞ்சு : (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம் அரைக்கீரைவிதைத்தைலம்,

கோகுல் கூந்தல் தைலம்

**வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.**

SOLE AGENTS:

For Madras
Suraj Agencies,
Madras.

For Coimbatore, Palghat & Nilgiris
B. Balapattabi Chettiar,
246, Vysyal St., Coimbatore.

சந்தாதார்கள் கவனிக்கவும்

வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்குச் சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் அனுப்பப்படும். சந்தா முடிந்தவுடன் புதிதாய்ச் சந்தா அனுப்பும்போது பழய சந்தா நம்பரைக் கண்டு எழுதவும். சந்தா நம்பர், சந்தாதாரரின் தபால் விலாசத்திற்குமேல் கொடுக்கப்பட்டிருக்கும் எண்தான்.

"வக்கீல்"
பொதுமக்களுக்கான உயர்தர மாத சட்ட வெளியீடு.
ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.,
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி, B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர், B A B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B. A., B. L.

"வக்கீல்"

(சந்தா விபரம்)

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு	ரூ. 3—0—0
தனிப் பிரதி ...	0—4—0
வெளிநாடு வருட சந்தா ...	6—0—0

"வக்கீல்" காரியாலயம்
தபால்பெட்டி நெ. 26 : கும்பகோணம்

"வக்கீல்"

விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப்பக்கம் (இரண்டு கலர்)	ரூ. 100
உள் அட்டை முழுப்பக்கம்	ரூ. 80
உள் பக்கம் முழுப்பக்கம்	ரூ. 60
ஷை ... அரைப் பக்கம்	ரூ. 35
ஷை ... கால் பக்கம்	ரூ. 20
ஒரு காலம் - அங்குலம்	ரூ. 5

(தொடர்ச்சியாய் 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 2 ஆகஸ்டு 1950 இதழ் 8

பொருள் அடக்கம்

பக்கம்

குறிப்புகள்
பயிற்சிபெற்ற சேனை 3
புதிய சட்டங்கள்
சுருக்கியும்—வரிசையாயும் 4
புதிய சட்டங்கள்
பொறுக்கியும்—விவரமாயும்
குடிவார பாத்திய ரயத்துப் பாதுகாப்புச் சட்ட திருத்தம் 5
இன்ஷ்யூரன்ஸ் சட்ட திருத்தம் 6
வழக்கும்-தீர்ப்பும்
குற்றத்தை ருசுப்பிக்க பெரும் சந்தேகத்தைக் கிளப்பும் ருசுமட்டில் போதாது. 10
சூதாட்டத் தடைச்சட்டம் இடிந்த வீட்டில் காசுவைத்துச் சீட்டாடுவது குற்றமாகுமா? 11
கேள்வி-பதில் 13
கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்
விலை நிர்ணயம்— இதர சர்க்கார் அறிக்கைகள். 17
உலையில்
ஜாகை-வாடகை சட்டத் திருத்த மசோதா 24

★ "வக்கீல்" பத்திரிகையில் செய்யும் விளம்பரம் தமிழ் மக்கள் வசிக்கும் இடமெங்கும் பரவும். ★

ஜாதகம்! ★ ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.

ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8 ஒரு வருட பலன் 8 பிரிவு களில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ

தெப்பக்குளம் P. O., திருச்சி.

187698

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

[illegible] ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழிந்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10

தபால் செலவு பிரத்தியேகம்

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்

வீரராகவ வைத்திய சாலா,

ஸ்ரீரங்கம் P. O., S. I.

சவுத் இந்தியன்
சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்

தயாரிப்புகள்:—

அப்ஜா - ஆனந்தா - கதம்பா

ரஞ்சிதா - நீரடிமுத்து

நறுமணங்கமழும் ஸ்நான சோப்புகள் யாவராலும் போற்றப்படுபவை.

மொத்த வியாபாரிகள் மட்டுமே தேவைக்கு எழுதவும்.

தாக சாந்தி! மன இன்பம்!!

நீங்கள் அருந்தும் ஒவ்வொரு துளியிலும் அமிர்தம் போன்ற சுவையைக் காண்பீர்கள்! உயர்ந்த முறையில் தயாரித்துள்ள ஷர்பத்பான வகைகள் விலை நயம், அன்பர்கள் யாவரும் விஜயம் செய்யுங்கள்!

பாம்பே ஐஸ் கூலிங் அண்டு ஷர்பத் கம்பெனி

103, பெரிய தெரு, :: கும்பகோணம்.

"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48 நாள்) பூஜை செய்தும் ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43—12—0

ஸ்ரீ மகாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள், தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ. 5-12-0 மணியார்டர் செய்யவும். மிகுதி தொகை, வெள்ளி, விளம்பரம் தபால் செலவிற்குமாக தேவை மீதி ரூ. 38/-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பிவைக்கவும்.

N.B. (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பவேண்டும், (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V. P. கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்.

ஸ்ரீ மகாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்,

கோட்டமருதூர், அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 2 ஆகஸ்டு 1950 இதழ் 8

குறிப்புகள்.

பயிற்சிபெற்ற சேனை:-

மூன்றாவது மகா யுத்தத்தை அமெரிக்கர்களும் ருஷ்யர்களும் உண்மையில் விரும்புகிறார்களோ, இல்லையோ தெரியாது; ஆனால் அதை ஆவலுடன் எதிர்பார்த்து, வரவேற்று, அதில் தம்மாலியன்ற பங்கு எடுத்துக்கொள்ளும் ஒரு சிறு சேனை, மற்ற நாடுகளில் இருப்பது போலவே, நம் நாட்டிலும் தயாராக இருக்கிறது. இதுதான் பதுக்கல்—கள்ளமார்க்கெட் சேனை!

சென்ற மகாயுத்தம் முடிந்தும் இச்சேனைக்கு இன்னும் ஓய்வு நேரம் கிடைக்கவில்லை. அதற்குள் மறுபடியும் அவர்கள் சாமர்த்தியத்தைக் காண்பிக்கும் சந்தர்ப்பம் வந்துவிட்டது. கொரியா யுத்தம் நீடிக்குமென்ற இவர்களின் ஆசையினாலேயே நாடெங்கும் எல்லாப் பண்டங்களின் விலைவாசிகளும் ஏறிவிட்டன. இச்சேனையைச் சேர்ந்த படையினர் நாட்டில் பல இடங்களில் சுற்றி விலை உயரக்கூடிய எல்லாப் பண்டங்களையும் சேகரிக்கின்றனர். அவரவர்களின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு இப்பண்டங்கள் கொஞ்ச நாள், தலைமறைவாக இருந்து பிறகு கொஞ்சங் கொஞ்சமாய்த் தலை காட்டலாம். இவ்விதம் சமூகத் துரோகம் செய்யும் பதுக்கல்—கள்ள மார்க்கெட் வியாபாரிகள் சிலரே என்றாலும் அவ்வியாபாரத்தை உடனே தடுக்கவேண்டிய கடமையை மற்ற வியாபாரிகள் இப்பொழுது உணர வேண்டும். பயிற்சிபெற்ற இச்சமூகத் துரோகிகளை உடனேயே கண்டுபிடித்து நசுக்காத எந்தச் சர்க்காரும் மக்கள் சர்க்கார் ஆகாது.

★

புதிய சட்டங்கள்

சுருக்கியும்—வரிசையாகவும்

1950 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. பிராக்கெட்டுக்குள் கொடுக்கப்பட்டிருப்பது ஜனாதிபதி அவர்களால் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட தேதி. இச்சட்டங்கள் "வக்கீல் பத்திரிகை முந்திய இதழ்களிலிருந்து வரிசையாகச் சொல்லப்பட்டு வருகின்றன.]

முந்திய இதழ்களில் சொல்லப்படாதவை.

26 ஆவது (மத்திய) சட்டம் (7-4-1950) (The Drugs (Control) Act 1950) மத்திய சர்க்காரால் குறிப்பிடப்படும் மருந்துகளின் விலை, வியாபாரம், விற்பனை சேகரிப்பு முதலியவற்றைக் கட்டுப் படுத்தும் சட்டம்.

30 ஆவது (மத்திய) சட்டம் (15-4-1950) (The part C States (Laws) Act 1950) மத்திய சர்க்காரின் நேரடியான நிர்வாகத்தின் கீழிருக்கும் (அரசியில் அமைப்புச் சட்டத்தில் C பாகத்தில் சொல்லப்பட்டிருக்கும்) சின்ன ராஜ்யங்களுக்கு A ராஜ்யங்களில் அமுலில் இருக்கும் எந்தச் சட்டத்தையும் தேவையான மாறுதல்களுடன் அமுலுக்குக் கொண்டுவர அதிகார மளிக்கும் சட்டம்.

1950 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப் பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

9 ஆவது (சென்னை) சட்டம்:—சென்னை ஐக்கிய நில அடமான பாங்குச் சட்டத்தில் (Madras Co-operative Land Mortgage Banks Act 1934) சில விஷயங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அங்கத்தினர்களால் எந்த ஐக்கிய நில அடமான பாங்குக்கும் எழுதிக் கொடுக்கப்படும் அடமானமும் மத்திய அடமான பாங்குக்கு அதே தேதியில் மாற்றப்பட்டதாகவே சட்டத்தால் பாவிக்கப்படும். அவிபக்த ஹிந்து குடும்பத் தலைவரால் ஐக்கிய நில அடமான பாங்குக்கு அடமானம் எழுதிக் கொடுக்கப்பட்டு வாங்கப்படும் கடன் குடும்ப அவசியமான காரியத்திற்காக அல்ல என்று மற்றக் குடும்பத்தினர் கக்ஷி சொன்னால் அதை கக்ஷி சொல்லும் அவர்கள் தான் ருசுப்பிக்கவேண்டும். மேலும் விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்யவும் புது முறை விவசாயம் செய்யவும், புதிதாக நிலம் வாங்கவும் குடும்பத் தலைவரால் இந்த ஐக்கிய நில அடமான பாங்குகளில் வாங்கப்படும் கடன்கள் குடும்ப அவசியமான கடன்களாகவே பாவிக்கப்படும். குடும்பத்தைச் சேர்ந்த மற்றெல்லோரையும், அவர்கள் மைனர்களாக இருந்தாலும் மேஜர்களாக இருந்தாலும், கட்டுப்படுத்தும் என்று இச்சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. (20-6-1950)

புதிய சட்டங்கள்

பொறுக்கியும் - விவரமாயும்

குடிவார பாத்திய ரயத்துப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்

[1950 ஆம் வருடத்திய 8-வது (சென்னை) சட்டம். 1949 ஆம் வருடத்திய (சென்னை) 24-வது சட்டத்தைத் திருத்துவது. 22-5-1950-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 30—5—1950 சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது]

ஜமீன் - இனாம் கிராமங்களில் குடிவார பாத்தியமுள்ள ரயத்துக்களைப் பற்றிய (Madras Tenants and Ryots Protection Act 1949) பாதுகாப்புச் சட்டம் ஒரு தாற்காலிகச் சட்டமாக இயற்றப்பட்டது. இவ்வித தாற்காலிகச் சட்டம் 1946 முதல் இருந்து வருகிறது. ஏனென்றால் வாரக் குறைப்புச் சட்டம், ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டம், இவைகளை அமுல் நடத்தி, குடிவார பாத்திய முள்ளவர்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கு முன்பே, குடிவார பாத்தியத்தை மேல்வாரதார் கோர்ட் ஏலம் முதலிய போட்டுப் பறிமுதல் செய்யாதிருக்கும் பொருட்டு இத்தற்காலிகச் சட்டங்கள் ஏற்பட்டன. கடைசியாக ஏற்பட்ட சென்னை 1949 ஆம் வருடத்திய 24-வது சட்டம் 7—10—1950 வரைதான் அமுலில் இருக்கும் என்று இருந்தது. இப்பொழுது இத்திருத்தச் சட்டத்தால் 7—10—1951 வரை அமுலில் இருக்கும் என்று திருத்தப்பட்டிருக்கிறது. மற்றத் திருத்தங்கள்:—(1) மேல்வாரம் கிடைக்க வேண்டுமென்று இனாம்தாரோ ஜமீன்தாரோ தாவா செய்தால் தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் இரண்டு வருட மேல்வாரம் அல்லது தாவாவில் கேட்கும் தொகை இரண்டில் எது குறைவாக இருக்கின்றதோ அதைக் கோர்ட்டில் கட்டினால், தாவா மேல் நடத்தாமல் நிறுத்தி வைக்கப்படும் என்று இருந்தது, இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. இதன்படி எந்தத் தேதியில் தாவா செய்திருப்பதாக நோட்டீஸ் பிரதிவாதியிடம் கொடுக்கப்படுகிறதோ, அதிலிருந்து இரண்டு மாதத்திற்குள் மேற்கண்ட தொகையைக் கட்டினால் போதும். அதுவும் நோட்டீஸ் சர்வான தேதிக்குமுன் உள்ள இரண்டு வருட மேல்வாரத்தை அல்லது தாவாவில் கேட்கும் தொகை எது குறைவோ அதைக் கட்டினால் போதும். (2) ஏற்கனவே உள்ள சட்டங்களின்படி மேல்வாரம் கட்டத் தவறி இருந்தாலும் அதற்காகத் தாவா நடந்து கொண்டிருந்தாலும், டிக்ரி ஆகி இருந்தாலும் பாதகமில்லை. இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து (30—5—1950 லிருந்து) இரண்டு மாதத்திற்குள் அதாவது 30—7—1950 க்குள் அத்தேதிக்குமுன் உள்ள இரண்டு வருட மேல்வாரத் தொகையையாவது அல்லது தாவா, அல்லது டிக்கிரியில் கண்ட தொகையையாவது எது குறைவோ அதைக் கட்டினாலும் போதும்; மேல் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்படும். (3) இனி ஆரம்பிக்கப்படும் தாவா அல்லது நிறைவேற்று மனு நடவடிக்கைகளிலும் நோட்டீஸ் கிடைத்த தேதியிலிருந்து 2 மாதத்திற்குள் மேற்கண்ட தொகை கட்டினாலும் போதும். (4) யாதொரு தாவா அல்லது நிறைவேற்று நடவடிக்கை இல்லாவிட்டாலும் இரண்டு வருட மேல்வாரத் தொகையையோ,

அல்லது அதற்கும் குறைவாகவே கொடுக்க வேண்டியிருந்தால் அத்தொகையையே மேல்வாரதாருக்கு அனுப்பிவிடலாம்; அல்லது கோர்ட்டிலும் கட்டிவிடலாம்; பிறகு ஒவ்வொரு வருடமும் மேல்வாரம் கொடுக்க வேண்டிய கெடுவிலிருந்து இரண்டு மாதத்திற்குள் அந்தந்த வருட மேல்வாரத் தொகையையும் கட்டிக்கொண்டு வரலாம். அப்படிச் செய்தால் நடவடிக்கைகள் ஆரம்பித்த பிறகு மறுபடியும் கட்டவேண்டியதில்லை. நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும்.

மேலும் இத்திருத்தச் சட்டத்தால் மேல்வாரதார் தொடரும் தாவா அல்லது மனு விஷயமாய்க் கட்டாயமாய், பிரதிவாதிக்கு (அதாவது குடிவாரதாருக்கு) நோட்டீஸ் கிடைக்கும்படி செய்யவேண்டியது கோர்ட்டின் கடமையாகச் செய்யப்பட்டிருக்கிறது.

இன்ஷ்யூரன்ஸ் சட்டத் திருத்தம்

[The Insurance (Amendment) Act 1950. 1950 ஆம் வருஷத்திய 47 ஆவது சட்டம். 20-5-1950ல் ஜனதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது.]

நீங்கள் எவ்வளவு அடக்கமாகவும் இரகசியமாகவும் உங்கள் வாழ்நாட்களைக் கழித்தாலும், நீங்கள் எவ்வளவு செட்டாகவும் சீராகவும் செலவு செய்து உங்கள் குடும்பத்தை நடத்தி வந்தாலும் உங்களுடைய எதிர் காலத்திலும் உங்கள் குடும்பத்தினரின் எதிர்காலத்திலும் உங்களை விட அதிகமான கவலைகொண்ட ஒரு மனிதர் இருக்கின்றார். அவர் தான் நீங்கள் அடிக்கடி சந்திக்கும் "இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு."

"இன்ஷ்யூரன்ஸ்" என்றால் 'உத்தரவாதம்' என்று அர்த்தம். திடீரென்று மரணம் நேர்ந்துவிட்டால் குழந்தை குட்டிகள் என்ன செய்யும்; சம்பாதிக்கும் சக்தி குன்றிய பிறகு என்ன செய்வோம்; குழந்தையின் கலியாணத்திற்கு என்ன செய்வது; படிப்புக்குப் பணம் வேண்டுமே என்று நமக்குத் தோன்றும் சமயத்தில் நம்முடைய மனதைத் தேற்றி, கவலையை அகற்ற இந்த இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு முன் வருவார். இது தான் அவருடைய தொழிலைச் சரிவர நடத்தும் சமயம். ஆனால் அவர் ஏதோ தர்மத்திற்காக உங்களுக்கு உதவி செய்வதற்கு வந்திருக்கிறார் என்று நினைக்க வேண்டாம். உங்களுக்குப் புத்தி கூறி, சமயத்தில் உதவி செய்வதில் அவருடைய சாமர்த்தியத்திற்கும் திறமைக்கும் ஏற்றவாறு அவருக்குப் பணம் வந்துகொண்டிருக்கும்.

இது எப்படி என்று ஒரு உதாரணத்துடன் பார்ப்போம். மாதச் சம்பளம் வாங்கும் ஒருவர் தாம் இறந்துவிட்டாலும் தம்முடைய மனைவி மக்களுக்கு ரூ. 5000 கிடைக்கவேண்டும் என்று நினைக்கிறார். அவரிடம் வேறு சொத்து இல்லை. அவர் வருஷம் கொஞ்சமாகவோ, ஆறு அல்லது மூன்று மாதத்திற்கு ஒரு முறையோ தவறாமல் ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குக் குறிப்பிட்ட கட்டணம் (Premium) கட்டிக்கொண்டே வந்தால், அவர் எப்பொழுது இறந்தாலும் அக் கம்பெனியார் அவருடைய மனைவிக்கோ அவர் குறிப்பிடும் நபரிடமோ ரூ. 5000 கொடுத்து விடுவார்கள். இவ்விதம் ஏற்பாடு செய்து கொண்டவர் (Policy Holder). முதல் வருடம் ரூ. 200 மட்டில் கட்டி இறந்து போய்விட்டாலும், அவருடைய மனைவி ரூ. 5000 அடைவாள்.

இதை எப்படி ஒரு கம்பெனி கொடுக்க முடியும்? யார் பணத்தை எடுத்துக் கொடுப்பார்கள் என்று தோன்றுகிறதா? இது தான் கணித நிபுணர்களின் ஜால வேலை. மனிதனிடம் இருக்கும் இயற்கைப் பயத்தாலோ முன்ஜாக்கிரதையாலோ 100 பெயர்கள் இவ்விதம் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுத்துக்கொண்டு ஒரு கம்பெனிக்குப் பணம் (Premium) கட்டிக்கொண்டே வந்தால் அவர்கள் எல்லோருக்கும் உட

னேயோ சீக்கிரத்திலோ அவர்கள் பயப் பட்டபடி யாதொரு விபத்தோ மரணமோ ஏற்படுவதில்லை என்றும், ஏதோ மிகச் சிலருக்கே அவ்விதம் நேருமென்றும் இந்த நிபுணர்கள் ஒரு சராசரிக் கணக்கு எடுத் திருக்கிறார்கள். மற்றெல்லோரும் நீண்ட ஆயுளுடன் இருந்து கடைசிவரை கட்டி வரும் பணம் ஏராளமாகச் சேர்ந்து விடும். எல்லோருக்கும் கொடுப்பதாய் ஒப்புக் கொண்ட தொகைகளைவிட அதிகமே வசூலாகிவிடும். அதில் ஒரு சிறு பகுதி யைக்கொண்டே முன்னதாகவே இறந்தவர் களுக்கு உத்தரவாதம் கொடுத்த தொகை யைக் கொடுத்து வரலாம். கம்பெனியின் கையிலும் ஏராளப் பணங்கள் குவியும். பல கம்பெனிகள் இருப்பதால் அவர்களும் இவ்விதம் தங்கள் தங்கள் கம்பெனியில் ஒப்பந்தம் செய்துகொண்டு பணம் கட்டி வரும்படி ஆட்களைச் (Policy Holders) சேர்க்கவே முன்னே பிரஸ்தாபிக்கப்பட்ட 'இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டு'களை நியமித் திருக்கிறார்கள். கம்பெனியில் சேர்ந்து பணம் கட்டுபவர்கள், முதல் வருஷம் கட்டும் பணத்தில் சரிபாதியைக்கூட ஏஜண்டுகளுக்குக் கமிஷனாகக் கொடுத்து விடுவார்கள். கம்பெனிகள் பல இருப்ப தால் ஆள் பிடிப்பதில் அவைகளுக்குள் போட்டி இருப்பது இயற்கையே. ஆள் சேர்க்கும் ஏஜண்டுகளுக்குச் சலுகைகள் காட்டுவதிலும் கம்பெனிகளுக்குள் போட்டி ஏற்படுவதும் இயற்கையே.

'இன்ஷ்யூரென்ஸ்' என்பதும் பலவகைப் பட்டது. ஒருவர் இறந்தால் பணம் கொடுப்பது போலவே, ஒரு கட்டடத்தில் நெருப்புப் பிடித்தாலும், மோட்டார் விபத்து ஏற்பட்டாலும் இதைப்போல் உள்ள பல சம்பவங்கள் நேர்ந்தாலும் குறிப்பிட்ட தொகை கொடுப்பதாகவும் "இன்ஷ்யூரன்ஸ்" தொழில் செய்யும் கம்பெனிகள் பல உண்டு. இக்கம்பெனிகள் பொதுமக்களிடம் வாங்கும் ஏராளமான தொகைகளை வீண் விரயம் செய்யாமல் பார்த்துக் கொள்ளவும் இவைகளில் சேரும் பொதுமக்களின் பாதுகாப்புக் காகவும் ஒரு சட்டம் இருக்கின்றது.

இவ்விதமான "இன்ஷ்யூரன்ஸ்" தொழிலை ஒழுங்குபடுத்தி, இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை ஒரு கட்டுக்குள் கொண்டு வரும் சட்டம் 1938 ஆம் வருடத்திய இன்ஷ்யூரன்ஸ் சட்டம். இச் சட்டத்தில் இப்பொழுது இத் திருத்தச் சட்டப்படி பல முக்கிய மாறுதல்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. இத் திருத்தங்களில் பொது மக்கள் சம்பந்தப்பட்டவரை அவசியமான வைகளைக் கவனிப்போம்.

இன்ஷ்யூரன்ஸ் சட்டம் இப்பொழுது காஷ்மீர் தவிர அகில இந்தியாவுக்கும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இச் சட்டத்தை அகில இந்தியாவிலும் அமுல் நடத்தவும் மேற்பார்வை பார்க்கவும் 'இன்ஷ்யூரன்ஸ் கண்ட்ரோலர்'(Controller of Insurance) என்ற அதிகாரி யொருவர் நியமிக்கப்படுவார். இனி பொதுக்கம்பெனி களும் கோவாபரேடிவ் சங்கங்களும் தவிர மற்றத் தனி நபர்கள் எவரும் இன்ஷ்யூ ரன்ஸ் தொழில் நடத்தக்கூடாது. இன்ஷ்யூ ரன்ஸ் தொழில் நடத்தும் கம்பெனிகள் அதற்காக மூலதனம் திரட்டுவதைப் பற்றிப் பல நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெ னியின் பெரும்பான்மையான பங்குகள் (Shares) ஒருவரிடமோ சிலரிடமோ குவிந்து விடாமல் பாதுகாக்கச் சில நிபந் தனைகள் இத் திருத்தச் சட்டத்தால் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளால் வசூல் செய்யப்படும் தொகைகளை விரயம் செய்யாமல் ஜாக்கிர தையாக வைத்துக் கொள்வதற்கான சில ஷரத்துக்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை நிர்வாகம் செய்வதற்கு மொத்த வரும்படியில் ஒரு விகிதத்தைக் கமிஷனாக எடுத்துக்கொள் ளும் ஏற்பாட்டின் பேரில் நிர்வாகிகளை நியமிப்பது இனி முடியாது. எந்த இன்ஷ் யூரன்ஸ் கம்பெனியும் அதிக கமிஷன் கொடுத்துத் தொழில்நடத்தாமலிருக்கவும் சில கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டிருக் கின்றன.

மேலும் ஒரு கம்பெனியின் தொழிலை வேறு கம்பெனிக்கு மாற்ற ஏற்கனவே

கோர்ட்டின் அனுமதி வேண்டும். இப்பொழுது கண்ட்ரோலருடைய அனுமதி வேண்டுமென்று திருத்தப்பட்டிருக்கிறது.

இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்பவரைப் பற்றிய திருத்தங்கள்:—இன்ஷ்யூரன்ஸ் பாலிஸி எடுத்துக் கொள்ளும்போதோ, பிறகோ, தாம் இறந்து போய்விட்டால், அத் தொகையை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர் குறிப்பிடலாம் என்று இருந்தது. அப்படிக் குறிப்பிடப் படுபவர் மைனராக இருந்தால் கம்பெனியிலிருந்து தொகை வாங்கப் பல சங்கடங்கள் இருந்தன. இப்பொழுது இது நீக்கப்பட்டிருக்கிறது. அதாவது இன்ஷ்யூரன்ஸ் தொகையை அடைய வேண்டியவர் ஒரு மைனராக இருந்தால் அவருக்காக யார் தொகையை கம்பெனியிலிருந்து வாங்கலாமென்றும் முன்னதாகவே பாலிசி எடுத்துக் கொள்பவரே குறிப்பிட்டுவிடலாம்.

இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளைப் பற்றியது:- இன்ஷ்யூரன்ஸ் செய்து கொள்ளும்படி ஜனங்களுக்கு எடுத்துரைத்து, ஆள் பிடித்துவிடும் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகள் கம்பெனிகளிடம் வாங்கக்கூடிய கமிஷன் எதற்குமேல் இருக்கக் கூடாதென்று இத் திருத்தச் சட்டப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப் புது விகிதம் 31—12—1950-க்குப் பிறகு அமுலுக்கு வரும். அதன்படி, ஒரே தடவையில் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு மொத்தப் பணம் கொடுத்து, பிறகு வருடந்தோறும் குறிப்பிட்ட தொகையை அவருக்குக் கம்பெனி கொடுக்கும்படி ஏற்படும் பாலிசிகளுக்கு 100-க்கு ரூ. 2-க்கு மேல் கமிஷன் கிடையாது; பல தடவை கம்பெனிக்குத் தொகை (வட்டம் - Premium) கட்டி, பிறகு குறிப்பிட்ட தேதியிலிருந்து கம்பெனியிலிருந்து ஒவ்வொரு வருடத்திலும் குறிப்பிட்ட தொகை பெற்றுக் கொள்வதாக ஏற்படும் பாலிசிகளுக்கு முதல் வருடப் பணத்தில் ரூ. 100-க்கு ரூ. 7-8-0. மற்ற வருடத் தொகையில் ரூ. 100க்கு ரூ. 2-0-0. இதற்குமேல் கமிஷன் கிடையாது; மற்ற வகை இன்ஷ்யூரன்ஸ் பாலிஸிகளுக்கு ஒருவர் முதல்வருஷம் கட்டும் தொகையில் (Premium) ரூ. 100-க்கு ரூ. 35/-க்கு மேலும், இரண்டாவது மூன்றுவது வருஷத் தொகையில் ரூ. 100-க்கு ரூ. 7-8-0க்கு மேலும் மற்ற வருடங்களில் கட்டும் தொகையில் ரூ. 100-க்கு ரூ. 5-0-0-க்கு மேலும் கமிஷன் ஏஜண்டுக்குக் கொடுக்கப்பட மாட்டாது. ஆனல் புதிதாகத் தொழில் ஆரம்பிக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் ஒருவர் முதல் வருடம் கட்டும் தொகையில் ரூ. 100-க்கு ரூ. 45 வரை கமிஷன் கொடுக்கலாம்! (பழைய கம்பெனிகள் இதற்கு முன் தொழில் பிடித்துவிடும் இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகளுக்கு முதல் வருடக் கட்டணத் தொகையில் ரூ. 100-க்கு ரூ. 40ம் புதுக் கம்பெனிகள் ரூ. 55 வரையிலும் கமிஷன் கொடுக்கலாம் என்றிருந்தது. இது 1951 முதல் ஏற்படும் பாலிஸிகளுக்கு குறைக்கப்பட்டிருக்கிறது.) இவ்விதம் மற்ற வகை ஏஜண்டுகளுக்கும் பல வகைப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் பேரம் பிடிப்பதற்கும் உயர்தர கமிஷன் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இன்ஷ்யூரன்ஸ் ஏஜண்டுகள் வாங்கிக் கொள்ளவேண்டிய லைசென்சுக் கட்டணம் ரூ. 3 ஆக இருந்தது ரூ. 10 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனல் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை புதுப்பித்துக் கொண்டால் போதும். புதுப்பிப்பதற்கும் ரூ. 10 தான் கட்டணம். லைசென்சு கெடு முடிவதற்கு ஒரு மாதம்முன்பே புதுப்பிக்க மனு போட வேண்டும். தாமதமாகப் போட்டால் ரூ. 3 அபராதம் கட்டவேண்டும்.

முக்கிய ஏஜண்டுகளும் (Principal agent, Chief agent) ரூ. 25 கட்டி, ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டும்.

முக்கிய ஏஜண்டுகள் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றியும் அவர்கள் கண்ட்ரோலருக்கு அனுப்ப வேண்டிய கணக்குகளைப் பற்றியும் சில நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு வேலை செய்த ஒரு ஏஜண்டுக்கு அக் கம்பெனி

யார் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட கமிஷன் தொகைகளை அந்த ஏஜண்டு வேறு கம்பெனிக்குப் போய்விட்டாலும் அல்லது இறந்துவிட்டாலும் கம்பெனிக்காரர் ஒருவருக்கும் கமிஷன் கொடுக்க வேண்டியதில்லை என்று ஒப்பந்தம் செய்துகொள்ளலாம் என்று இதுவரை இருந்தது. இப்பொழுது இது மாற்றப்பட்டிருக்கிறது. (1) ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் நிலைமை சரியாக இல்லை என்று சர்க்கார் கெஜட்டில் விளம்பரம் செய்து, அக் காரணத்தினால் ஏஜண்டு தம் வேலையை விட்டாலும், (2) அதே கம்பெனிக்கு மட்டில் தொடர்ந்து 5 வருஷம் அந்த ஏஜண்டு வேலை செய்தும் தம் மூலம் ஐம்பதாயிர ரூபாய்க்குப் பாலிஸி சேர்த்துக் கொடுத்த ஒரு வருஷத்திற்கு பிறகு ஏஜண்டு அக் கம்பெனியிலிருந்து விலகிக் கொண்டு அவருக்குக் கம்பெனி கொடுக்க வேண்டிய கமிஷன் ரூ. 100-க்கு ரூ. 4-க்கு மேல் இல்லாமல் இருந்து பிறகு அவர் தம் ஏஜண்டு வேலையை விட்டாலும், (3) அதே கம்பெனியில் 10 வருடங்களுக்குக் குறையாமல் ஏஜண்டாக இருந்து ஏஜன்சியை விட்ட பிறகு வேறு கம்பெனியில் சேராமலிருந்தாலும் விலகும் ஏஜண்டுக்குக் கொடுக்கவேண்டிய கமிஷன் தொகைகளைக் கம்பெனியார் கொடுத்துவர வேண்டும். மேலே 2, 3, ஆகக் கண்டிருக்கும் சந்தர்ப்பங்களில் கமிஷன் அடைய வேண்டிய ஏஜண்டு இறந்து விட்டாலும் அக் கமிஷன் தொகைகளை அவருடைய வார்சுகளுக்குக் கொடுத்துவர வேண்டும்.

போனஸ் லாபம் நீக்கி ரூ. 2000-க்கு மேற்படாத பாலிஸிகள் சம்பந்தமாய், தொகை அடையப் பாத்தியம் கொண்டாடுபவருக்கும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கும் ஏதாவது தகராறுகள் ஏற்பட்டால் அதை இன்ஷ்யூரன்ஸ் கண்ட்ரோலர்தான் விசாரித்து, தீர்மானம் செய்ய வேண்டும். சிவில் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது.

ஓர் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் நிர்வாகம் அதில் பாலிசி எடுத்துக்கொண்டிருப்பவர்களுடைய அக்கரைக்கு விரோதமாக இருப்பதாகக் கண்ட்ரோலருக்குத் தோன்றி, அவர் சிபார்சு செய்தால் அக் கம்பெனியை நிர்வாகம் செய்ய மத்திய சர்க்கார் ஒரு நிர்வாகியை (Administrator) நியமிக்கலாம். இதுசம்பந்தமான பல புதிய விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எல்லா இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளையும் அங்கத்தினர்களாகக் கொண்ட 'இந்திய இன்ஷ்யூரன்ஸ் சங்கம்' (Insurance Association of India) என்று ஒரு ஸ்தாபனம் புதிதாக இத்திருத்தச் சட்டப்படி அமைக்கப்பட்டிருக்கிறது. இன்ஷ்யூரன்ஸ் தொழிலை முறையுடன் நடத்தும் விஷயமாயும் ஏஜண்டுகளைப் பரீட்சை செய்து, தேர்ந்தெடுக்கும் விஷயமாயும் சர்க்காருக்கு ஆலோசனைகள் சொல்லவும், கட்டண விகிதங்கள் ஏற்படுத்தவும், இன்னும் பலவிஷயங்களிலும் இச்சங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை ஜமீன் - இனும்-ஒழிப்புச் சட்ட விதிகள்.

ஒரு ஜமீன் அல்லது இனும் கிராமத்தைத் திறப்பாக மாற்ற, சர்க்கார் விளம்பரம் செய்த பிறகு, செட்டில்மெண்ட் நடவடிக்கையில் கிஸ்தி ஏற்படுத்தும் வரை, குடிவார பாத்தியமுள்ளவர்கள் சர்க்காருக்கு மேல் வாரம் கொடுத்து வரவேண்டும். அந்தக் கிராமத்தில் வாரக் குறைப்புச் சட்டப்படி வாரக் குறைப்பு ஏற்பட்டிருந்தால் அதன்படி மேல்வாரத்தைச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டும். அப்படி வாரக் குறைப்பு ஏற்படாமலிருந்தால் ஜமீன்தார் அல்லது இனும்தாருக்கு அந்தப் பசலிக்கு என்ன மேல்வாரம் கொடுக்கவேண்டுமோ அதேபோல் சர்க்காருக்குப் பிரதிவருடமும் கொடுக்க வேண்டும் என்று செக்ஷன் 23ல் இருக்கின்றது. அதை ஒட்டி இப்பொழுது சர்க்கார் கீழ்க்கண்டபடி விதிகள் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அதாவது:—வாரக்குறைப்புச் சட்டப்படி மேல் வாரம் குறைக்கப் படாமலிருந்து, மேல் வாரம் ரொக்கமாக இல்லாமல் மகசூலின் ஒரு பகுதியாக இருந்தால்,

எவ்வளவு அளவு தானியம் மேல்வாரமாகச் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டுமென்று கலெக்டரோ, அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரியோ, (கிராமக் கணக்குகளைப் பார்த்தும் விசாரணை செய்தும்) நிர்ணயம் செய்வார். அதன் விலை என்ன என்று ரெவின்யூ போர்டார் நிர்ணயம் செய்வார்கள். அவர்கள் விலை நிர்ணயம் செய்யாவிட்டாலும் கலெக்டர் நிர்ணயம் செய்வார். அதன்படி ரொக்கத்தை மேல்வாரமாகச் சர்க்காருக்குக் கொடுத்து வரவேண்டும்.

(6—6—1950 சென்னைச் சர்க்கார் கெஜட் பாகம் I ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 245.)

சென்னை ஜமீன் - இனம் நிலங்கள் (வாரக் குறைப்பு) சட்ட விதிகள் திருத்தம்.

ஜமீன் இனம் முதலிய 'எஸ்டேட்' நிலங்களுக்கு ரயத்துக்கள் கொடுக்க வேண்டிய மேல் வாரத்தை குறைப்பதற்காக ஏற்பட்டிருக்கும் சட்டப்படி சர்க்காரால் வாரக் குறைவு நிர்ணயம் செய்யப்பட்டு அது கெஜட்டில் விளம்பரம் செய்யப்பட்டவுடன், மேல்வாரம் அடைய பாத்தியமுள்ள ஜமீன்தார் அல்லது இனம்தார் ஜில்லா கலெக்டருக்கு விவரம் அடங்கிய ஒரு ஸ்டேட்மெண்ட் அனுப்பவேண்டுமென்று ஒரு விதி ஏற்படுத்தப் பட்டிருந்தது. (8—6—48 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல்சப்ளிமெண்ட்—பக்கம் 142). அந்த விதி இப்பொழுது சில மாறுதல்களுடன் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புது விதிப்படி வாரக்குறைவு ஏற்பட்டு அது கெஜட்டில் பிரசுரமான ஒரு மாதத்திற்குள் அக்கிராமத்தின் மேல்வாரதார் (அதாவது ஜமீன்தார் அல்லது இனம்தார்) 1357 ஆம் பசலிக்கும் அதற்குப்பின் கெஜட் பிரசுரமானவரை உள்ள பசலிகளுக்கும் அக்கிராமத்தைப் பற்றிய கீழ்க்கண்ட விவரங்களைக் கண்டு ஜில்லா கலெக்டருக்கோ அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரிக்கோ ஒரு யாதாஸ்து (ஸ்டேட்மெண்ட்) அனுப்ப வேண்டும். இதற்குமுன் வாரக் குறைப்பு ஏற்பட்டு கெஜட்டில் பிரசுரமான கிராமங்களுக்கும் 13—7—1950 க்குள் மேல்கண்ட 'ஸ்டேட்மெண்ட்' அனுப்பவேண்டும். மேற்படி ஸ்டேட்மெண்டில் காணவேண்டிய விவரங்கள் :—

(1) கிராமத்தின் பெயர். (2) பட்டா உள்ள ரயத்தின் பட்டா நம்பர், பெயர், விலாசம். (3) நிலங்கள் பட்டாதார் அனுபவத்தில் இல்லாவிட்டால், நிலத்தை அனுபவிப்பவர் பெயர், விலாசம். (4) ஒவ்வொருவருடைய பட்டாவில் அடங்கிய நிலங்களின் சர்வே நம்பர் அல்லது பைமாஷ் நம்பர், விஸ்தீர்ணம், தரம். (5) வாரக்குறைப்பு உத்தரவு ஏற்படுமுன் இருந்த மேல் வாரம் (6) அந்த பசலிக்கு இதற்குமுன் ஏதாவது மேல்வாரம் வசூல் செய்யப்பட்டிருந்தால் அது எவ்வளவு? யாரிடம் வசூல் செய்யப்பட்டது? (7) பேஷ்குஷ், குவிட்ரெண்ட், செஸ் முதலிய மேல்வாரதார் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய தொகைகள்.

முதல்தடவை இவ்விதம் ஸ்டேட்மெண்ட் அனுப்பிய பிறகும், ஒவ்வொரு பசலிக்கும் மேல்வாரம் கொடுக்கப்பட வேண்டிய மாதத்தின் முதல் தேதிக்கு முன்பே (மேலே 6-வது விவரத்தைத் தவிர மற்ற விவரங்கள் அடங்கிய) ஸ்டேட்மெண்டை அனுப்பிவரவேண்டும். இவ்விதம் ஸ்டேட்மெண்ட் கொடுக்கவேண்டிய கெடுவை ஒத்திப்போட கலெக்டருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த விதி வாரக்குறைப்பு மட்டில் ஏற்பட்டிருக்கும் கிராமங்களுக்குத்தான். ஜமீன்—இனம் ஒழிப்புச் சட்டத்தின்படி திறப்பாக மாற்றுவதற்காக சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் இவ்விவரங்களை அனுப்பவேண்டியதில்லை.

(13-6-1950. சென்னைச் சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல்சப்ளிமெண்ட்—246)

—(o)—

187698

> இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

குற்றத்தை ருசுப்பிக்க பெரும் சந்தேகத்தைக் கிளப்பும் ருசு மட்டில் போதாது.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி கோவிந்த மேனன் அவர்களும் கனம் நீதிபதி கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும்

ஆதாரம்: *1950 (1) மதராஸ் லா ஜர்னல் 663.*

பெரியசாமி ஒரு கொலைக்கேசில் மாட்டிக் கொண்டார். அவர்மீது நடந்த செஷன்ஸ் விசாரணையில் ருசுவான விஷயங்கள் இவைதாம்:—

கொலை செய்யப்பட்டவரும் பெரியசாமியும் கொலை நடந்த தினத்திற்குச் சிலகாலம் முன்பு முதல் ஒருவருக்கொருவர் விரோத பாவமாக இருந்தனர்; 'என் ஆட்டை எப்படி வெட்டினையோ, அப்படியே உன்னை வெட்டிவிடுவேன்' என்று பெரியசாமி அவர் மீது கர்வம் கட்டினார்; கொலை நடந்தது 1949 ஆகஸ்ட் 4ல்; அன்று இருவரும் அவரவருடைய ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஒரே இடத்திற்குப் போய், கொலை நடந்த நேரத்திற்குச் சிலமணி நேரம் முன்பு வரை இருவரும் ஒருவருக் கொருவர் சமீபத்திலேயே இருந்ததாகத் தெரிகின்றது; கொலை நடந்த கொஞ்சநேரத்திற்குப் பிறகு பெரியசாமி கொலை நடந்த இடத்திலிருந்து வந்து கொண்டிருந்தார். அத்துடனில்லை; கையில் ரத்தக் கறையுடன் ஒரு அரிவாள் இருந்தது; பிறகு போலீஸ் விசாரணையில் கொலை நடந்த இடத்திற்கு 2½ பர்லாங்குக்கு அப்பால் உள்ள ஒரு புதரிலிருந்து ஒரு ரத்தம் சிந்திய அரிவாள் எடுக்கப்பட்டது; அரிவாள் அந்த இடத்தில் இருக்கிறதென்ற சமாசாரம் பெரியசாமி மூலம் தான் தெரியவந்தது.

இதுதான் அவ்வழக்கில் சாக்ஷிகள் ருசுப்பித்தது. கொலையை நேரில் ஒருவரும் பார்க்கவில்லை. கொலை செய்தது யார் என்று உங்களுக்குத் தோன்றுகிறது? பெரியசாமியாகத்தான் இருக்கவேண்டும் என்று தானே மனதில் ஒரு பலத்த சந்தேகம் தோன்றுகிறது! மேற்கண்டபடி ருசுவான சந்தர்ப்பங்களை வைத்துக் கொண்டு பெரியசாமிதான் கொலை செய்தவர் என்றுகூட நிச்சயம் செய்து விடுவீர்கள். அப்படித்தான் மதுரை செஷன்ஸ் ஜட்ஜும், பெரியசாமிதான் கொலை செய்தாரென்று தீர்மானித்து அவருக்கு மரண தண்டனையும் விதித்தார்.

ஆனால் சென்னை ஹைகோர்ட்டின் உயர் நீதிபதிகள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. இவைகளெல்லாம் பெரியசாமிமீது பலத்த சந்தேகத்தைக் கிளப்பக் கூடிய சந்தர்ப்பங்கள்தான். ஆனால் சந்தேக நிலைமையைத் தாண்டி பெரியசாமிதான் கொலை செய்தார் என்று நிச்சயமாகச் சொல்லக் கூடிய ருசு இவைகளில் ஒன்று கூட இல்லை என்றும், அரிவாளில் இருக்கும் ரத்தம்

இறந்தவருடைய ரத்தம்தான் என்று (ரசாயன பரீட்சை மூலம்) ருசுப்பித்திருந்தால்தான் பெரியசாமிதான் கொலை செய்தவர் என்று நிச்சயிக்க முடியுமென்றும், மனதில் பலமான சந்தேகம் தோன்றினாலும் சட்டப்படி பெரியசாமி தான் கொலை செய்தவர் என்று ருசுப்பிக்க அச்சந்தர்ப்பங்கள் போதா என்றும் அபிப்பிராயப்பட்டனர். நேர்முக ருசு இல்லை. அனுமான ருசு போதவில்லை. பெரியசாமி விடுதலையடைந்தார்.

சூதாட்டத் தடைச் சட்டம். இடிந்த வீட்டில் காசுவைத்துச் சீட்டாடுவது குற்றமாகுமா ?

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்

நீதிபதி: கனம் நீதிபதி சந்திரா ரெட்டி அவர்கள்

ஆதாரம்: 63 லா வீக்லி - 354.

'சூதாட்டம்' ஒரு கொடிய பழக்கம் தான். நான்கு சிநேகிதர்கள் கூடும் ஏதாவதொரு சமயத்தில் உல்லாசமாகப் பொழுது போக்கும் எண்ணத்துடன் கொஞ்சம் காசு வைத்துச் சீட்டு ஆடுவதால் ஒன்றும் பெரிய கெடுதி நேர்ந்துவிடாது. ஆனால் சூதாட்டத்தையே தொழிலாக நடத்துபவர்கள் பிறர் குடியைக் கெடுப்பவர்கள் தான். கஷ்டப்படாமல் பணம் சம்பாதிக்கலாம் என்ற பேராசையை மக்கள் மனதில் ஊட்டி, அவர்களைப் பல வகைப்பட்ட சூதாட்டங்களில் ஈடுபடும்படி தூண்டி விடுவது ஒரு சமூகத் துரோகமேயாகும்.

சூதாட்டம் (Gaming) என்பது என்ன ? சூதாட்டத்தில் ஈடுபடுபவர் அதில் தம்முடைய திறமையையோ புத்தி சாலித்தனத்தையோ உபயோகிப்பதில்லை. அவர் சூதாட்டத்தில் வெல்வதும் தோற்பதும் அவருடைய 'அதிர்ஷ்டத்தை' (chance) ப் பொறுத்ததாகவே இருக்கிறது. தமக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களின் முடிவைப் பொறுத்து இருவர் போட்டியிட்டுக் கொள்வதும் (wagering and betting) சூதாட்டமே. உதாரணமாக இன்று அமெரிக்காவில் பருத்தி விலை ஏறுமா இறங்குமா என்று இருவர்கள் பந்தயம் கட்டிக் கொள்வதும் சூதாட்டமாகவே கருதப்படும். ஒரு குதிரைப் பந்தயத்தில் எந்தக் குதிரை ஜயிக்கும் என்று பந்தயம் கட்டுவது; யார் கையில் பெரிய சீட்டுகள் இருக்கின்றதென்று பார்ப்பது; சொக்கட்டான், போன்ற பல வகைப்பட்ட ஆட்டங்கள் சட்டப்படி சூதாட்டங்களே.

சென்னை ராஜ்யத்தில் (மாகாணத்தில்) சூதாட்டத்தைக் குற்றமாக்கும் சட்டங்கள் இரண்டு. ஒன்று சென்னை மாநகரில் மட்டில் அமுலில் உள்ள சென்னை சிடி போலீஸ் ஆக்ட். மற்றொன்று இம்மாகாணத்தில் மற்ற எல்லா இடங்களிலும் அமுலில் இருக்கும் சென்னை சூதாட்டத் தடைச் சட்டம். (The Madras Gaming Act 1930) இச்சட்டப்படி லாபம் அடைவதற்காகப் பொதுச் சூதாட்ட விடுதிகள், நடத்துவதும், அபபொது விடுதிகளிலும், தெருக்களிலும் பொது ஸ்தலங்களிலும் சூதாடுவதும்தான் குற்றமாக்கப் பட்டிருக்கிறது.

பிரஸ்தாப வழக்கில்:— ஒரு பாழும் வீட்டில சத்திய நாராயண ராஜூவும் மற்றும் சிலரும் ஒரு நாள் இரவு நேரத்தில் காசு வைத்துச் சீட்டு ஆடிக் கொண்டிருந்தனர். இதைப் பார்க்க நேர்ந்த அவ்வூர் போலீஸ் அதிகாரி ஒருவர் அவர்களிடம் இருந்த ரூ. 251-13-3 யும் கைப்பற்றி, அவர்கள் மீது 'பொது ஸ்தலத்தில்' சூதாடிய குற்றத்திற்காக, கிரிமினல் வழக்கும் தொடர்ந்தார். அவ்வழக்கை விசாரித்த பீமாவரம் சப் மாஜிஸ்ட்ரேட் அவர்களைத் தண்டித்து, கைப்பற்றப்பட்ட தொகையையும் சர்க்காருக்குப் பறிமுதல் செய்தார். இதன் பேரில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடந்த அப்பீலில் கீழ்க்கோர்ட் தண்டனை உறுதி செய்யப்பட்டது. தண்டனை அடைந்தவர்கள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர்.

ஹைகோர்ட்டில் சூதாட்டம் ஆடியது உண்மை என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஆனால் ஆடிய இடம் ஒரு 'பொதுஸ்தலம்' அல்ல என்றும் பொதுஸ்தலத்தில் ஆடுவது தான் குற்றமாகையால், இந்தப் பாழும் வீட்டில் சீட்டாடியது சட்டப்படி குற்ற மல்ல என்றும் வாதிக்கப்பட்டது. பாழடைந்த வீடாக இருந்தாலும், அது தெருவின் சமீபத்தில் ஒரு முக்கிய இடத்தில் இருப்பதாலும், ஒரு வெற்றிலை பாக்குக் கடைக்கு அருகில் இருப்பதாலும் இது ஒரு பொதுஸ்தலம் என்று கீழ்க்கோர்ட்டுகள் அபிப்பிராயப் பட்டு, எதிரிகள் தண்டிக்கப்பட்டனர். இதை ஹைகோர்ட்டின் உயர் நீதிபதி அங்கீகரிக்கவில்லை.

உயர் நீதிபதி அவர்களின் தீர்ப்பில், இதற்கு முன் நடந்த சில தீர்ப்புக்கள் என்ன என்றும் ஆராயப்பட்டிருக்கிறது. 1938ல் நடந்த ஒரு வழக்கில் தண்ணீர் வற்றிய ஒரு குளத்தில் சூதாடியது குற்றமல்ல என்றும், அங்கே அடிக்கடி ஜனநடமாட்டம் இல்லையாகையால் அது பொது ஸ்தலமல்ல வென்றும் ஒரு நீதிபதி அபிப்பிராயப் பட்டிருக்கிறார். (46-லா வீக்லி- 641). பம்பாய் ஹை கோர்ட்டில் நடந்த ஒரு வழக்கில் ஒரு ஸ்பெஷல் ரயில் வண்டியில் சூதாடியது குற்றமல்ல என்று தீர்ப்பு ஏற்பட்டது (30-பம்பாய்-348). வேறொரு பம்பாய் வழக்கில் பம்பாய் துறைமுகத்திலிருந்து இதற்காகவே கூலிக்கு ஒரு படகு அமர்த்திக்கொண்டு நடுச்சமுத்திரத்தில் போய் சூதாடியது குற்றமல்ல என்று ஒரு நீதிபதியின் அபிப்பிராயம் (29-பம்பாய்-386). சூதாட்டம் ஆடிக்கொண்டிருப்பதைப் பொது மக்கள் பார்க்க வசதியுள்ள இடமாக இருந்து அதைப் பார்ப்பவர்கள் மனதில், 'நாமும் இதில் சேர்வோம்' என்று தூண்டக்கூடிய இடங்களில் சூதாடுவதுதான் குற்றமாகும் என்று இந்நீதிபதி விளக்கம் செய்திருக்கிறார். ஒரு ஆங்கில வழக்கிலும் இதே விதமான சட்டம் விளக்கப்பட்டிருக்கிறது. சொத்து ஒரு தனி மனிதனின் சொந்த சொத்தாக இருந்தாலும் பொது மக்கள் அங்கே வந்து போகும் வழக்கம் இருந்து, அதை ஒருவரும் தடுப்பதில்லை என்று ஒரு இடம் இருந்தால் அது ஒரு "பொதுஸ்தலம்'' என்று தான் கருதப்படவேண்டுமென்று ஆங்கில நீதிபதிகள் அவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டனர். (14-குயின்ஸ் பெஞ்சு-டிவிஷன் 63) இத்தீர்ப்பைப் பல இந்திய உயர் நீதி மன்றங்கள் பின்பற்றியும் இருக்கின்றன. உதாரணமாக:- சென்னை துறைமுகத்திற்குள் அன்னியர்கள் ஒருவரும் உள்ளே போக உரிமையில்லை; இருந்தாலும் பொது ஜனங்கள் அங்கே வந்து போய்க் கொண்டிருப்பதால் அங்கு சூதாடியது ஒரு பொது ஸ்தலத்தில் சூதாடியதாகவே ஒரு சென்னை வழக்கில் கருதப்பட்டது. (39 - மதராஸ் - 886.) கோயில் மதில் சுவருக்குள் சூதாடுவது 'பொது ஸ்தலத்தில்' சூதாடுவதாகும் என்று மற்றொரு சென்னை வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. (40 - மதராஸ் - 556.)

இவற்றிலிருந்து என்ன ஏற்படுகின்றதென்றால் சூதாடும் இடம் பொதுச் சொத்தாக இருக்கவேண்டுமென்பதில்லை; ஒரு தனி நபரின் சொந்த சொத்தாக இருந்தாலும் பொது ஜனங்கள் அங்கே வரக்கூடியதாகவும் நடைமுறையில் வந்து போய்க் கொண்டுமிருந்தால் அந்த இடம் சட்டப்படி ஒரு 'பொதுஸ்தலம்'. அங்கே சூதாடுவது குற்றமாகும் என்று இத்தீர்ப்புகள் சட்டத்தை விளக்கி இருக்கின்றன.

இத்தீர்ப்புகளை அனுசரித்து, பிரஸ்தாப வழக்கில் சூதாட்டம் நடந்த வீடு இடிந்ததாக இருந்தாலும் அங்கே பொது ஜனங்கள் வந்து போய்க் கொண்டிருந்ததாக யாதொரு ருசுவும் இல்லை என்றும், அதன் சொந்தக்காரரின் அனுமதியின் பேரில்தான் ஒருவர் அங்கே போக முடியுமென்றும் ஆகையால் இந்த இடம் ஒரு 'பொதுஸ்தலம்' அல்ல என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டு, அங்கே சூதாடியவர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தண்டனையை ரத்து செய்து பறிமுதல் செய்யப்பட்ட பணத்தையும் அவர்களிடம் திருப்பிக் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே.

கேள்வி: (L. 3034 முகமது இப்ராஹிம் திண்டுக்கல்) கடலை உடைக்கும் பெட்டி (Decorticator) வைத்துள்ள மில் சொந்தக்காரர் உடைப்புக் கூலி ஊதியத்தை அடைவதற்காக விவசாயிகளுக்கோ அல்லது வியாபாரிகளுக்கோ, முன்பணமாகவோ, அல்லது மூட்டைகள் மில்லுக்கு வந்த பின்போ, ரூபாய் கொடுத்து, கடலை உடைத்தபின் உடைப்புக்கூலி பற்று எழுதிக் கொள்கிறார். முன் வாங்கிய கடனையும் உடைப்புக் கூலியையும் கொடுத்து பருப்பை எடுத்துப் போகிறார்கள். இவ்விதம் நடந்த பற்று வரவுக்கு மில் சொந்தக்காரர் விற்பனை வரி செலுத்த வேண்டுமா?

பதில்: நிலக் கடலை சம்பந்தப்பட்ட வரையில் அதை வாங்குபவர்தான் விற்பனை வரிகொடுக்கவேண்டும். உண்மையில் கடலை வாங்கப்பட்டால் வரி கொடுக்க வேண்டும். கடலையின் பேரில் அடகாக மட்டில் பணம் கொடுத்திருந்தால் விற்பனை வரி கிடையாது. அவ்விதம் கடலையின் பேரில் அடகாக லேவாதேவி செய்வதற்குச் சென்னை 'பான் புரோகர்' சட்டப்படி லைசென்சு முதலிய வாங்கிக்கொண்டு அத் தொழிலை நடத்தவேண்டும்.

கேள்வி: (L. 3075 ரத்தினசபாபதி, பொள்ளாச்சி) ஒருவருக்குத் தகப்பனார் சொத்து இருந்து அதைக்கொண்டு அவர் சுயமாகச் சம்பாதித்ததில் மகனுக்கு உரிமை உண்டா? இப்பொழுது மசோதா நிலைமையில் இருக்கும் இந்து சட்டம் அமுலுக்கு வந்தால் தகப்பனுடைய சொத்தில் மகனுக்குப் பாத்தியம் இல்லையா?

பதில்: தகப்பனுடைய சொத்தைக் கொண்டு ஒருவர் சம்பாதிப்பதும் குடும்பச் சொத்தே தான். அவருடைய மகன்களுக்கும் அதில் உரிமை உண்டு. (மசோதாவில் உள்ளபடி சட்டம் அமுலுக்கு வந்தால் தகப்பனுடைய சொத்தில் மகனுக்குத் தகப்பன் உயிருடன் உள்ள வரை யாதொரு பாத்தியமும் வராது)

கேள்வி: (L. 3077 சந்தா நம்பர் 2294) ஒரு அடமானப் பத்திரம் ரிஜிஸ்டரானாலும் இரண்டு சாக்ஷிகள் இல்லா விட்டால் செல்லாது என்று முந்திய இதழ் ஒன்றில் பதில் அளிக்கப்பட்டது. ஆனால் சாக்ஷிகள் என்று எழுதி அதன் கீழ் ஒரு சாக்ஷியும், (பத்திரம்) எழுதியவர் இன்னார் என்று இருந்தால் அந்த நபரும் சாக்ஷியாக கருதப் பட்டு ஷை அடமானப் பத்திரம் செல்லுமா?

பதில்: செல்லும். பத்திரம் எழுதியவர் சாக்ஷியாகவும் கையெழுத்துப் போடலாம். 'சாக்ஷிகள்' என்ற பன்மை உபயோகப் படுத்தி அதன் கீழ் பத்திரம் எழுதியவர் கையெழுத்து செய்திருப்பதால் அவரும்

சாக்ஷியாகவே தான் கையெழுத்துப் போட்டார் என்று ஏற்படும்.

கேள்வி: (L. 3080 சபாபதி முதலியார் ஈரோடு) இரு சகோதரர்கள் தகப்பனுடன் ஏக குடும்பமாக இருந்துகொண்டு பெரிய சகோதரர் வேறு நபருடன் கூட்டாக வியாபாரம் செய்துகொண்டும், சிறியவரும் தகப்பனும், தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்துகொண்டும் இருக்கின்றனர். இப்படி இருக்கும்போது சகோதரர்களுக்குள் மனவேற்றுமை உண்டாகி, எந்த வியாபாரக் கணக்கையும் சம்பந்தப்படுத்தாமல், தகப்பனாரையும் சம்பந்தப்படுத்தாமல் சகோதரர் இருவர் மட்டில் பாகப் பிரிவினைசெய்து கொண்டது சட்டப்படி பாக பிரிவினை ஆகுமா?

பதில்: தகப்பன் சம்பந்தப் பட்ட வரையில் அப்பாகப் பிரிவினை அவரைக் கட்டுப்படுத்தாது. ஆனால் அவர் ஆட்சேபிக்காமலிருந்தால் வேறு ஒருவரும் அதை ஆட்சேபிக்க முடியாது என்று பொதுவாகச் சொல்லலாம்.

கேள்வி: (L. 3082 - பழனியாண்டி, மதுரை) ஒரு பெண் சொந்தச் சம்பாத்தியத்தில் தேடிய சொத்துக்களை வைத்து இறந்து விட்டாள். அவளுக்கு ஒரு மகனும் ஒரு விதவை மகளும் உண்டு. மகன் சீக்காளி. விதவை மகளுக்கு ஒரு ஆண் பிள்ளையும் நான்கு பெண்களும் உண்டு. சொத்துக்களை விதவை மகள் தான் அநுபவித்து வருகிறாள். அவ்விதவை மகள் தம்மிடம் இருக்கும் சொத்துக்களைத் தம்முடைய மகனுக்கு மட்டில் கொடுக்க நினைத்தால் பெண்கள் நான்கு பெயர்களும் அது தங்கள் பாட்டியின் சொத்தென்று தொடர்ந்தால், பாகம் கிடைக்குமா?

பதில்: விதவை மகளுக்கு அவள் தாயாரின் சொத்தைத் தன் ஆயுள் வரை அனுபவிக்கும் பாத்தியம்தான் உண்டு. அதை அவள் ஒருவருக்கும் கொடுக்க முடியாது. அவளுக்குப் பின் அவளுடைய பெண்கள்தான் வார்சு. ஆனால் அவள் உயிருடன் இருக்கும் வரை பெண்களுக்கு உரிமை இல்லை.

கேள்வி: (L. 3085 - காதர் மொய்தீன் ராவுத்தர், கரூர்) ஒரே கட்டடத்தில் மண்டிக் கடையும் ரேஷன் ஷாப்பும் நடத்தும் ஒருவர், ரேஷன் விதிப்படி ரேஷன் ஷாப்புக்கு வெள்ளிக்கிழமை விடுமுறையாகவும், மண்டிக் கடைக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறையாகவும் அமைத்துக் கொள்ளலாமா? (ரேஷன் கடைக்குச் சிப்பந்தி தனியாகவும் மண்டிக் கடைக்குச் சிப்பந்தி தனியாகவும் இருக்கின்றனர்).

பதில்: இரண்டு வகை வியாபாரங்களும் எல்லா அம்சங்களிலும் தனித்தனியாக இருந்தால் வெவ்வேறான தினங்களில் விடுமுறை நாட்கள் அமைத்துக் கொள்ளலாம்.

கேள்வி: (L. 3093 நாராயணசாமி நாயுடு, விருதுநகர்) வருடந்தோறும் எரு அடித்து விவசாயம் செய்யவேண்டுமென்ற ஷரத்துக்கண்டு குத்தகைக்கு விடப்பட்டிருக்கும் நிலத்தில் குத்தகைதார் எரு அடிக்காமல் ஒரு வருடம் சாகுபடி செய்து மறு வருடமும் அப்படியே செய்ய நினைத்து வரும்போது அதைத் தடுத்துக் குத்தகையை ரத்துச் செய்யலாமா?

பதில்: எரு அடிக்காவிட்டால் குத்தகையை ரத்துசெய்யும் உரிமை குத்தகைப் பத்திரத்தில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தால்தான் குத்தகையை ரத்து செய்ய முடியும். இல்லாவிட்டால் எரு அடிக்கத் தவறியதால் ஏற்படும் நஷ்டத்தைத்தான் கேட்கலாம்.

கேள்வி (L. 3096-சுந்தரம், ராசிபுரம்) ஒருவர் தம்முடைய சொத்தின்பேரில் ரூ. 5000-துக்கு 'செக்யூரிடி' எழுதிக் கொடுத்து ரூ. 3000 மட்டில் பெற்றுக் கொள்ளுகிறார். பின்பு வேறு ஒரு நபரிடமிருந்து 'புரோ நோட்டின்' பேரில் ரூ. 2000 கடன் வாங்குகிறார். அதற்குப்பின் முதல் செக்யூரிடிக்காரரிடமிருந்து பாக்கி ரூ. 2000-மும் கடன் வாங்குகிறார். இரண்டாவதாக வாங்கி இருக்கும் கடன் 'செக்யூரிடி' சொத்தைக்கட்டுப்படுத்துமா?

பதில்: புரோநோட்டின் பேரில் வாங்கப்பட்டிருக்கும் கடனுக்கு 'சொத்து செக்யூரிடி' ஏற்படாது. ஆனால் புரோ நோட்டின் பேரில் டிக்ரி ஏற்பட்டால் அந்த

டிகிரியை நிறைவேற்றி அச்சொத்தை (ரூ. 5000 செக்யூரிடிக்கு உட்படுத்தி) ஜப்தி செய்யலாம்.

கேள்வி: (L. 3099-அழகருசாமி, சோளவந்தான்) ஒரு குடும்பத்தில் மிக வயதாகி, பேசமுடியாத நிலைமையில் இருக்கும் தகப்பனும் 14 வயதுள்ள ஒரு மகனும் இருக்கின்றனர். அவர் தம்மனைவியையும் அப்பதினான்கு வயது மகனையும் பாதுகாக்காமல் அவளுடைய தகப்பன் வீட்டுக்கு அனுப்பிவிட்டு மூன்று வருடங்களுக்கு முன் இரண்டாவது கலியாணமும் செய்து கொண்டுவிட்டார். இரண்டாம் மனைவிக்குக் குழந்தைகள் கிடையாது. அவர் குடும்பச்சொத்துக்களை விற்று வீண் விரயம் செய்கிறார். இதைத் தடுக்க முதல் மனைவியால் முடியுமா? முதல் மனைவிக்கும் அவள் மகனுக்கும் என்ன பாத்தியம் உண்டு? என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளலாம்?

பதில்: புருடன் முதல் மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுக்கக்கடமைப்பட்டிருக்கிறார். சொத்துக்கள் பிரிபடாத குடும்பச்சொத்தாக இருந்தால், முதல் மனைவியின் மகனுக்குப் பாகம் உண்டு. கோர்ட்டு மூலம் இப்பாகம் கிடைக்கத் தாவா செய்யலாம். பாகம் கேட்கா விட்டாலும் மைனர் மகனைப் போஷணை செய்ய வேண்டியது தகப்பனின் கடமையாதலால் அம்மகனுடைய போஷணை, படிப்பு முதலிய செலவுகளுக்கும்பணம் கேட்கலாம். இந்த உரிமையையும் கோர்ட்மூலம் வற்புறுத்தலாம்.

கேள்வி: (L. 3119 - சுப்ரமணி, குயிலம்) ஒரு விவசாயி தன் பண்ணைச் செலவுக்காக மாகாணத்தின் தலைநகரத்திலிருந்தோ மற்றைய நகரங்களிலிருந்தோ பண்ணைக்குச் சிமண்டு கொண்டுவர, 'பர்மிட்' வாங்கவேண்டுமா?

பதில்: வேண்டாம்.

கேள்வி: (L. 3130-கந்தசாமி, சேலம்) மூத்தமகள், தனது தாயார் பெயருக்குக் கிரயம் வாங்கி இருக்கும் காலிநிலத்தில், பெற்றோருடைய சம்மதத்தின் பேரில் வீடு கட்டி இருந்தால், வீடுயாருக்குச் சொந்தம்? அவளுடைய சகோதரர்களுக்குப் பாத்தியம் உண்டா?

பதில்: காலிநிலத்தின்சொந்தக்காரரின் அனுமதிபெற்று, வீடு கட்டியவருக்குத் தான் வீடுசொந்தம்.

கேள்வி: (L. 3141 - ராஜுசெட்டி, மதராஸ்) ஒரு ஹிந்து இறந்து விட்டார். அவருடைய மனைவி, பிள்ளை, தம்பி, அண்ணன், இவர்களும் (அவருக்கு முன்பே) இறந்துவிட்டனர். இறந்தவருடைய அண்ணன் மகன்கள் இருவரில், ஒருவர் இருக்கிறார். மற்றொருவர் இறந்து போய் அவருடைய மகன் இருக்கிறார். இவ்விருவர்களும் வார்சாவார்களா?

பதில்: இறந்தவருடைய அண்ணன் மகன மட்டில்தான் வார்சு. அண்ணன் பேரனுக்கும் பாத்தியமில்லை.

கேள்வி: (L. 3147-செல்லப் பிள்ளை, உடையார் பாளையம்) ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மணம் செய்வித்து, குடும்பசொத்துக்கள் பூராவும் அப்பெண்ணுக்கும் அவன் புருடனுக்கும் 'உயில்' மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து, தாயார் இறந்துவிட்டாள். புருடன் இரண்டாம் தாரம் மணம்செய்து கொண்டு அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து இரண்டாம் தாரமும் இறந்து விட்டாள். சொத்துக்களில் யார் யாருக்கு எவ்வளவு பாத்தியமுண்டு?

பதில்: உயில் மூலம் கொடுக்கப்பட்ட சொத்தில் புருடனுக்குப் பாதியும் முதல் மனைவிக்குப் பாதியும் உண்டு. முதல் மனைவி இறந்துவிட்டபடியால் அவளுடைய பாதிச்சொத்துக்கு அவளுடையமகன்தான் வார்சு. புருடனுக்குச்சொந்தமானபாதியில் அவர் உயிருடன் இருக்கும்வரை வேறு ஒருவருக்கும் பாத்தியமில்லை. அவர் இறந்து போனால் அப்பாதியை அவருடைய இரண்டு மகன்களும் சமபாகமாக அடைவார்கள். அப்பொழுது முதல் தாரத்தின் மகனுக்கு மொத்தச் சொத்தில் முக்கால் பங்கும் இரண்டாவது தாரத்தின் மகனுக்கு கால்பங்கும் இருக்கும்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

சென்னை உணவு தானியத் தீவிரக் கொள் முதல் உத்தரவு (1950)

[அமுலுக்கு வந்த தேதி:- 1-7-1950.]

சென்னை சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இப்புதுக்கட்டுப்பாடு உத்தரவு மலையாள ஜில்லா, கோயமுத்தூர் ஜில்லா, சென்னை நகரம், இம் மூன்று இடங்களைத் தவிர மற்றச் சென்னை ராஜ்யத்தில் (மாகாணத்தில்) உள்ள எல்லா இடங்களிலும் அமுலில் இருக்கும்.

இந்த உத்தரவால் கட்டுப்படுத்தப்பட்ட தானியங்கள்:- நெல், அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, கோரா, சாமை, வரகு, வரிகலு இவை. இக்கட்டுப்பாடு உத்தரவின்படி 1360 ஆம் பசலியிலும் (அதாவது 1-7-1950 முதல் ஆரம்பமாகும் பசலியிலும்) அதற்குப் பிந்திய பசலிகளிலும் எந்த நிலத்திலும் சாகுபடியாகும் மேற்கண்ட உணவு தானியங்கள் யாரிடம் 'உபரி' யாக, அதாவது தேவைக்கு அதிகமாக, இருந்தாலும் அதை அவர் ஜில்லா கலெக்டரிடமாவது அவரிடம் அதிகாரம்பெற்ற அதிகாரி அல்லது கொள் முதல் ஏஜண்டுகளிடமாவது விற்றுவிடவேண்டும். நிலத்தின் சொந்தக்காரர், சாகுபடி செய்பவர், குத்தகைதாரர் உட்குத்தகைதாரர் அல்லது வேறு எந்த முறையில் சாகுபடி செய்பவராக இருந்தாலும், குத்தகைக்காக இந்தத் தானியங்களை வாங்குபவர்களும், கடனின் வட்டிக்காக இந்தத் தானியங்களை வாங்குபவர்களும், (கொள்முதல் செய்ய நியமிக்கப்படும் மொத்தவியாபாரிகளையும் சில்லறை வியாபாரிகளையும் தவிர) வேறு எவரிடமும் உள்ள தானியத்தை, அவர் அதை எப்படி தம் வசம் அடைந்திருந்த போதிலும், மேற்கண்டபடி உபரி தானியத்தைச் சர்க்கார் அதிகாரம் பெற்ற கொள்முதல் ஏஜண்டுகளிடம் விற்றுவிடவேண்டும். 'உபரி தானியம்' அதாவது 'அதிகப்படி தானியம்' எவ்வளவு என்று ஜில்லா கலெக்டர் தீர்மானிப்பார். தானியங்களை வைத்திருப்பவரின் குடும்பத்திற்குச் சாப்பாட்டுக்கு வேண்டிய தானியம், அவர் தானியமாகக் கொடுக்க வேண்டிய குத்தகை, வட்டி அல்லது கடன் இவைகளுக்காக வேண்டிய அளவு; சாகுபடிக்காக, வழக்கமாக, சாகுபடிக்காரர்களுக்கு முன் கூட்டியே கொடுக்கவேண்டிய தானியம்; விதை, தசகூலி இவைகளுக்கான தானியம்; கிராம ஊழியர்களுக்குத் தானியமாகக் கொடுக்க வேண்டியதாக இருந்தால் அதற்கான தானியம், இவைகளை எல்லாம் கணக்குச் செய்து 'உபரி' அல்லது 'அதிகப்படி தானியம்' என்பது எவ்வளவு என்று அந்தந்த ஜில்லா கலெக்டர்கள் நிர்ணயம் செய்வார்கள். ஜமீன் நிலங்கள் இருக்கும் இடங்களில் சாகுபடி செய்பவர் ஜமீன்தாருக்குக் கொடுக்கவேண்டிய தானியத்தைக் கொடுக்காமலோ கொடுக்க இஷ்டப்படாமலோ வைத்திருந்தால் அதைச் சாகுபடி செய்பவரிடம் உள்ள அதிகப்படி தானியமாகக் கருதப்படும்.

உணவு தானியம் தட்டுப்படாமல் சேகரித்து அனுப்பவேண்டிய அவசியம் ஏற்பட்டால், உபரி தானியம் நிர்ணயம் செய்யப்படும் முன்பே ஒருவர் சர்க்காருக்கு எவ்வளவு தானியம் என்ன விலைக்கு விற்கவேண்டுமென்று தற்காலிகமாகவும் கலெக்டர் உத்தரவிடலாம்.

தானியத்தைக் கிராமத்திலோ அல்லது கொள் முதல் ஏஜண்டின் கிடங்குக்குக் கொண்டுபோயோ, எந்த எந்தத் தேதிக்குள் விற்கவேண்டுமென்றும் ஜில்லா கெஜட்டில், ஜில்லா கலெக்டர் விளம்பரப் படுத்துவார். அதற்குள் தானியத்தைக் கிராமத்திலோ, கிடங்கிலோ, கொள் முதல் ஏஜண்டுகளிடம் விற்று முதல் செய்து, ஒப்படைத்து விட வேண்டும். அதற்குச் சென்னை சர்க்காரால் நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விலை கொடுக்கப்படும். குத்தகைக்கோ வட்டிக்கோ தானியங்களை அடைப்பவர்கள், சாதாரணமாய் அதை எங்கே எடுத்துச் செல்லுகின்றனரோ அந்த ரெவின்யூ டிவிஷனுக்குள் உள்ள கிடங்கடியில் அத்தானியத்தை விற்கலாம்.

சில ஜில்லாக்களில், அதாவது கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர், தஞ்சாவூர், இந்த ஜில்லாக்களில் அந்தந்த ஜில்லா கலெக்டரின் உத்தரவின்றி, மற்ற எவரும், (அதாவது கலெக்டரிடம் அதிகாரம் பெற்ற கொள்முதல் ஏஜண்டுகள் தவிர மற்ற எவரும்) உணவு தானியங்களை வேறு ஒருவரிடம் வாங்கவும் விற்கவும் கூடாது. மற்ற ஜில்லாக்களில் ஒருவரும் 'ரேஷன் கார்டு' அல்லது 'பர்மிட்' இல்லாமல் எந்த உணவு தானியங்களையும் வாங்கவும் விற்கவும் கூடாது. அவசியம் ஏற்பட்ட போது ஒவ்வொருவரிடமும் எவ்வளவு தானியம் (Stock) இருக்கிறதென்று தெரிவிக்கும்படி, ஜில்லா கலெக்டர் ஜில்லா கெஜட்டில் விளம்பரம் செய்வதின் மூலம் கேட்கலாம்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் அல்லது பிர்கா சப்ளை ஆபீசர் இவர்கள் அந்தஸ்துக்குக் குறையாத ரெவின்யூ அதிகாரிகளும், உதவி ரேஷன் ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத எந்த ரேஷன் அதிகாரியும், சப் இன்ஸ்பெக்டர் அந்தஸ்திக்கு குறையாத எந்த வஞ்சத்தடை கள்ளமார்க்கெட் தடை இன்ஸ்பெக்டர்களும் அவரவர் அதிகார எல்லைக்குள் எந்த இடங்களிலும் தானியங்கள் இருக்கும் இடங்களை நியாயமான காலங்களில் போய் சோதனை செய்யலாம்; சட்டவிரோதமாய் உணவு தானியம் எடுத்துக் கொள்ளப் பட்டுப் போவதாகச் சந்தேகம் ஏற்பட்டால், எந்த லாரி அல்லது வண்டிகளையும் நிறுத்தி, சோதனை செய்யலாம்; தானியங்களையும் மூட்டைகளையும் வண்டி முதலியவற்றையும் கைப்பற்றலாம். வண்டி முதலியவைகளை ஓட்டிச் செல்பவர்கள் இவ்வதிகாரிகளுக்கு உதவியாகவே இருக்க வேண்டும்.

ஆனால் ஒரு கட்டடத்தில் நுழையும் அதிகாரிகள் அதிலிருப்பவர்களின் சமூக, மதாசார பழக்க வழக்கங்களுக்கு மரியாதை காட்டியே, தங்கள் அதிகாரத்தைச் செலுத்தவேண்டும். கட்டடம் பூட்டி இருந்தால் இரண்டு தகுந்த சாட்சிகளுக்குமுன் பூட்டை உடைத்து அதிகாரி உள்ளே நுழையலாம்.

இவ்வுத்தரவின்படி ஒருவர் தம்மிடமிருக்கும் உபரி தானியத்தைச் சரியான கெடுவில் கொடுக்காமலிருப்பது ஒரு குற்றமாகும். மேலும் இந்த உபரி தானியத்தை அதிகாரிகள் கைப்பற்றி, கொள்முதல் ஏஜண்டுகளிடம் கொடுக்கலாம். சரியான விலையைவிடக் குறைவான விலையே அப்பொழுது கொடுக்கப்படும்.

இந்தக் கட்டுப்பாடு உத்தரவை மீறியதாகக் கிரிமினல் வழக்குத் தொடர ஜில்லா கலெக்டரின் அனுமதி வேண்டும். இந்த உத்தரவின்படி ஒருவர் குற்றம் செய்து அதற்கான தண்டனையை அடைவதுடன் தானியங்களை எடுத்துச் செல்லும் வண்டி, சட்டி இருக்கும் சாக்கு முதலியவை சர்க்காருக்குப் பறிமுதல் செய்யப்படலாம்.

(1-7-1950 சென்னை சர்க்கார் விசேஷ கெஜட்—பாகம் II, பக்கம் 1.)

(கோயமுத்தூர் ஜில்லாவுக்கு மட்டில்) சென்னை உணவு தானிய (கரார் கொள்முதல்) உத்தரவு - 1950.

(Madras Food Grains (Levy Procurement) Order 1950.)

[அமுலுக்கு வந்த தேதி 4—7—1950]

இக் கட்டுப்பாடு உத்தரவு கோயமுத்தூர் ஜில்லாவில் மட்டில்தான் அமுலில் இருக்கும். சென்னை ராஜ்யத்தில் மற்ற இடங்களில் அமுலில் இருக்கும் உணவு தானியத் தீவிரக் கொள்முதல் உத்தரவுக்கும் கோயமுத்தூர் ஜில்லாவில் அமுலில் இருக்கும் இந்த உத்தரவுக்கும் உள்ள வித்தியாசங்கள் மட்டில் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன. மற்ற ஷரத்துக்கள், முன் விவரிக்கப்பட்டுள்ள தீவிரக் கொள்முதல் உத்தரவில் இருப்பது போலவே.

உணவு தானியம் என்பது:—நெல், அரிசி, சோளம், கம்பு, கேழ்வரகு, கோரா, சாமை, வரகு, வருகலு இந்தத் தானியங்களைத்தான் குறிக்கும்.

கோயமுத்தூர் ஜில்லாவில் உள்ள எந்த நிலங்களையும் 1359 அல்லது 1360ஆம் பசலிகளில் மேற்கண்ட உணவு தானியங்கள் சாகுபடி செய்த எவரும், (அதாவது நிலத்தின் சொந்தக்காரராக இருந்தாலும் சரி, சாகுபடிக்காரர், குத்தகைதாரர், உட்குத்தகைதாரர், அல்லது நிலங்களைச் சாகுபடிக்காக குத்தகைக்கு விட்டிருப்பவரும்

யாராக இருந்தாலும்) அவர் தம் வசமுள்ள 'உபரி தானியத்தை' அதாவது அதிகப்படியாக இருக்கும் தானியத்தைக் கோயமுத்தூர் ஜில்லா கலெக்டரிடமோ அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரி அல்லது கொள்முதல் ஏஜண்டிடமோ விற்றுவிட வேண்டும்.

'உபரி தானியம்' அதாவது அதிகப்படி தானியம் எவ்வளவு என்று ஜில்லா கலெக்டரால் நிர்ணயம் செய்யப்படும். இவ்விஷயத்தில்தான் மற்ற ஜில்லாக்களில் அமுலில் இருக்கும் உத்தரவுக்கும் கோயமுத்தூர் ஜில்லாவில் அமுலில் இருக்கும் இந்த உத்தரவுக்கும் உள்ள முக்கிய வித்தியாசம். மற்ற ஜில்லாக்களில் ஒருவரின் குடும்பத்திற்கும் சாகுபடி செலவு விதை முதலிய செலவுகளுக்கும் போதுமான தானியம் போக மிகுதி இருப்பது உபரி தானியமாகக் கருதப்படும். ஆனால் கோயமுத்தூர் ஜில்லாவில் அமுலில் இருக்கும் இவ்வுத்தரவுப்படி 'உபரி தானியம்' எப்படி நிர்ணயம் செய்யவேண்டுமென்று ஒரு வசூல் விகித அட்டவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு நிலத்தில் உற்பத்தியாகும் தானியத்தின் அளவையும் சாகுபடி செய்பவரிடம் இருக்கும் மொத்த நிலங்களின் விஸ்தீரணத்தையும் பொறுத்து, அவர் ஒரு ஏகருக்கு எவ்வளவு மணு தானியம் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அட்டவணைப்படி ஒருவர் எவ்வளவு தானியம் கொடுக்கவேண்டுமென்று கலெக்டர் நிர்ணயம் செய்வார். குறிப்பிட்ட நபர்களுக்கு இந்த விகிதத்தை மாற்றவும் கலெக்டருக்கு அதிகாரம் உண்டு. அட்டவணை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்விதம் நிர்ணயம் செய்யப்படும் உபரி தானியத்தை எந்த எந்தத் தேதிக்குள் அளக்க வேண்டுமென்று ஜில்லா கெஜட்டில் கலெக்டரால் விளம்பரம் செய்யப்படும். அத்தேதிக்குள் தானியங்களைக் கிராமத்திலோ, கொள்முதல் ஏஜண்டின் கிடங்கிலோ கொடுத்து அதற்குச் சர்க்காரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் விலையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அப்படிக் கெடுவில் ஒருவர் உபரி தானியத்தைக் கொடுக்காமலிருப்பது குற்றமாகும். மேலும் அதிகாரிகள் இந்த உபரி தானியத்தைக் கைப்பற்றி, கொள்முதல் ஏஜண்டிடம் கொடுத்து விடவும் அதிகாரம் உண்டு. அப்படிச் செய்தால் சரியான விலைக்குக் குறைவான விலையேதான் கொடுக்கப்படும்.

சரியான கெடுவுக்குள் ஒருவர் கொடுக்க வேண்டிய அளவு தானியத்தைக் கொடுக்காத குற்றத்தைப் பற்றி கிரிமினல் கோர்ட்டுகளில் வழக்குத் தொடராமல் ஜில்லா கலெக்டரோ, ஜில்லா சப்ளை ஆபீசரோ ராஜி (Compound) செய்துகொள்ளலாம். ஆனால் எவ்வளவு தானியங்கள் கொடுக்கப்பட வேண்டுமோ அதன் சரியான கிரயத்தைப் போல் மூன்று மடங்குத் தொகையை அபராதமாகக் கொடுத்து ராஜி செய்துகொள்ள வேண்டும். அப்படிக் கொடுக்கத் தவறினாலும் கிரிமினல் வழக்குத் தொடரலாம்.

இவ்விதம் சர்க்கார் கொள்முதல் ஏஜண்டுகளிடம் விற்றுவிட வேண்டிய உபரி தானியத்தைத் தவிர ஒருவர் வசமுள்ள தானியத்தைக் கீழ்க்கண்ட காரியங்களுக்காக உபயோகப்படுத்தலாமே ஒழிய, வேறு ஒருவருக்கும் விற்கக் கூடாது. அதாவது:—

(1) தன்னுடையவும் தன் குடும்பத்தினருடையவும் சாப்பாட்டுக்காகவும்.

(2) குத்தகைக்காகவும், வட்டி அல்லது கடனுக்காகவும் தானியங்கள் கொடுக்கவேண்டியிருந்தாலும்.

(3) வழக்கத்தை அனுசரித்து தானியமாக முன்னதாகக் கொடுக்கவேண்டிய விவசாயச் செலவுகளுக்காகவும்.

(4) விதை தசகூலிக்காகவும்.

(5) வழக்கத்தை ஒட்டி, கிராம ஊழியர்களுக்குக் கொடுக்கவேண்டிய உணவு தானியங்களையும், ஒருவர் செலவு செய்யலாம். வேறு வகையில் செலவு செய்யவோ, விற்கவோ கலெக்டருடைய அனுமதி வேண்டும்.

(அதிகாரிகள், குற்றங்கள் முதலியவை சென்னை உணவு தானிய தீவிரக் கொள்முதல் உத்தரவில் இருப்பது போலவேதான் இதிலும் இருக்கின்றன.)

'லெவி'க் கொள்முதல்—அட்டவணை

கீழ்க்கண்ட விஸ்தீர்ணமுள்ள நிலமுள்ளவர்கள் ஒவ்வொரு மகசூலிலும் ஒவ்வொரு ஏகர் நிலத்திற்கும் எவ்வளவு மணு தானியம் கொடுக்க வேண்டும் என்பது :—

நெல்

ஒரு ஏகர் நிலத்தில் விளையும் மகசூல் அடியில் கண்டபடி இருந்தால்.	1 ஏகாவரை நிலம் உள்ளவர்கள்.	1 ஏகருக்குமேல் 2 ஏகர் உள்பட்ட நிலம் உள்ளவர்கள்	2 ஏகருக்கு மேல் 5 ஏகர் உள்பட்ட நிலம் உள்ளவர்கள்.	5 ஏகருக்கு மேல் 10 ஏகர் உள்பட்ட நிலம் உள்ளவர்கள்.	10 ஏகருக்கு மேல் 25 ஏகர் உள்பட்ட நிலம் உள்ளவர்கள்	25 ஏகருக்கு மேல் நிலம் உள்ளவர்கள்
5 மணங்கு முதல் 7½ மணங்கு வரை	—	1	1½	2	2¼	2½
7½ ,, 10 ,,	—	1¼	2	2½	2¾	3¼
10 ,, 12½ ,,	1	1½	2½	3	3½	4
12½ ,, 15 ,,	1½	2¼	3¼	4½	5¼	6½
15 ,, 17½ ,,	3	3	4	6	7	9
17½ ,, 20 ,,	3½	4½	6	8	9	10
20 ,, 22½ ,,	4	6	8	10	11	12
22½ ,, 25 ,,	4½	7	9½	11½	12½	13
25 ,, 27½ ,,	5	8	11	13	14	15
27½ ,, 30 ,,	5½	9	13½	15½	16½	17
30 ,, 32½ ,,	6	10	16	18	19	20
32½ ,, 35 ,,	7	12	18½	20½	21½	22½
35 ,, 37½ ,,	8	14	21	23	24	25
37½ ,, 40 ,,	10	17	22½	25½	26½	27
40 மணங்கும் அதற்குமேலும்	12	20	24	28	29	30

மற்ற தானியங்கள்

ஒரு ஏகர் நிலத்தில் விளையும் மகசூல்	1 ஏகாவரை	1–2 ஏகர்	2–5 ஏகர்	5–10 ஏகர்	10–25 ஏகர்	25 ஏகருக்கு மேல்
5 மணங்கு முதல் 7½ மணங்கு வரை	—	—	—	1	1	1
7½ ,, 10 ,,	—	—	—	1	1	1
10 ,, 12½ ,,	—	1	1	1	1	2
12½ ,, 15 ,,	1	1½	1½	2	2½	3
15 ,, 17½ ,,	1½	2	2	3	4	4
17½ ,, 20 ,,	2	2½	3	4	5	6
20 ,, 22½ ,,	2½	3	4	5	6	8
22½ ,, 25 ,,	3½	3½	4½	6	7	9
25 ,, 27½ ,,	4	4	5	7	8	10
27½ ,, 30 ,,	4	5	6	8½	10	12
30 ,, 32½ ,,	4	6	7	10	12	15
32½ ,, 35 ,,	5	6½	7½	11	14	16
35 ,, 37½ ,,	6	7	8	12	16	18
37½ ,, 40 ,,	7	8	9	13½	17	19
40 மணங்கும் அதற்குமேலும்	8	9	10	15	18	20

கோயமுத்தூர் ஜில்லாவில் ஒருவர் பெயரில் மொத்தம் எவ்வளவு விஸ்தீர்ணமுள்ள நிலங்கள் பதிவு செய்து கொள்ளப்பட்டிருக்கின்றனவோ அதை ஆதாரமாகக் கொண்டுதான் உபரி தானியம் கணக்குச் செய்யப்படும். ஒத்தி அல்லது சுவாதீன அடமானம் பெற்றவர் வாசமுள்ள நிலங்களும் இதில் சேரும்.

பிரிபடாத குடும்பங்களும், சேர்ந்து ஒரே குடும்பமாக வசிக்கும் கணவன், மனைவி மற்ற உறவினர்களும் ஒரே நபராகப் பாவிக்கப்படும்.

ஆனால் நெல் பயிர் செய்யப்படும் மொத்த நிலங்களுக்குத் தனியாகவும், மற்றத் தானியங்கள் பயிர் செய்யப்படும் நிலங்களுக்குத் தனியாகவும் மொத்த விஸ்தீர்ணம் கணக்குச் செய்யப்படும்.

மானவாரி நிலங்களாக இருந்து நெல் தவிர மற்றத் தானியங்களே பயிர் செய்யப்பட்டு 5 ஏகர் நிலத்திற்குமேல் இல்லாதவர்கள் யாதொரு தானியமும் கொடுக்கவேண்டியதில்லை. இவர்களுக்கு மட்டில் விதி விலக்கு. வேறு ராஜ்யத்தின் எல்லைக்கு ஒட்டியிருக்கும் 'பெல்ட் ஏரியா' என்று விளம்பரப்படுத்தப்பட்ட இடங்களுக்கு இந்த விதிவிலக்கும் கிடையாது. இவ்விடங்களில் நிலமுள்ளவர்கள் யாவரும் இவ்வுத்தரவுப்படி தானியம் கொடுக்கவேண்டியவர்களே.

இவ்வுத்தரவுப்படி உபரிதானியம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டவர்கள் பலராக இருந்தாலும் ஒவ்வொருவரும் அதைச் சர்க்காருக்குக் கொடுக்கக்கடமை பட்டிருக்கிறார்.

சென்னை உணவு தானியங்களின் விலைக் கட்டுப்பாடு உத்தரவின் திருத்தம்.

1949 ஆம் வருஷத்திய உணவு தானிய விலைக் கட்டுப்பாடு உத்தரவுப்படி நெல் முதலிய உணவு தானியங்களின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ('வக்கீல்'—1950 ஜனவரி இதழ் பக்கம் 24 ஐப் பார்க்கவும்) இந்த உத்தரவில் இப்பொழுது ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது ஒவ்வொரு ஜில்லாவிலும் 48 ஆம் வருடத்திய தீவிரக் கொள்முதல் உத்தரவுப்படி எந்தத் தேதிக்குள் தானியங்களை அளக்கவேண்டுமென்று ஜில்லா கலெக்டர் உத்தரவு செய்கின்றாரோ அத் தேதிக்குள் அளந்தால்தான் நிர்ணயிக்கப்பட்ட விலை கிடைக்கும். அத்தேதிக்குப் பிறகு விற்கப்படும் நெல் முதலிய தானியங்களுக்கு மணக்கு 1க்கு அணா 6 வீதம் பிடித்தம் செய்யப்படும் என்று இருந்தது. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் திருத்தப்படி, கலெக்டரால் குறிப்பிடப்படும் தேதிக்குள், அளந்தாலும் அளக்காவிட்டாலும் தீவிரக் கொள்முதல் உத்தரவுப்படி அதிகாரிகளால் கட்டாயக் கொள்முதல் செய்யப்படும் நெல் முதலிய தானியங்களுக்குத்தான் மேற்கண்டபடி குறைந்த விலை கொடுக்கப்படும் என்று திருத்தப்பட்டிருக்கிறது.

(13-6-1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II ரூல் சப்ளிமெண்ட்-பக்கம் 60)

மிளகாயுடன் கட்டாயமாகப் பருத்தியும் சாகுபடி செய்ய உத்தரவு [1950]

மத்திய சர்க்காரால் 6-6-1950 இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது சென்னை ராஜ்யம் முழுவதிலும் அமுலில் இருக்கும் என்று 1 ஆவது பிரிவில் சொல்லப்பட்டிருந்த போதிலும், 2 ஆவது பிரிவின்படி குண்டூர், கிருஷ்ணா, கிழக்குக் கோதாவரி, மேற்குக் கோதாவரி இந்த ஜில்லாக்களில் மட்டும் மானவாரியாக மிளகாய் சாகுபடி செய்பவர்கள் அத்துடன் கட்டாயமாகப் பருத்தியும் சாகுபடி செய்யவேண்டுமென்றும் 14 வரிசை மிளகாய்ப் பயிருக்கு 1 வரிசையாவது பருத்திப் பயிர் கட்டாயமாக வைத்திருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப் பட்டிருக்கிறது. (மற்ற ஜில்லாக்களைப் பற்றி இப்பொழுது யாதொன்றும் சொல்லப் படவில்லை).

(13-6-1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட்— பக்கம் 61)

ஜவுளி

சென்னை-ஜவுளி (வியாபாரிகள்) கட்டுப்பாடு உத்தரவின் திருத்தம்:

இன்றும் ஒருவகை ஜவுளி வியாபாரத்திற்குத் தனியாக லைசென்சு வாங்கிக் கொள்ளவேண்டும். அதாவது சாயம் தோய்க்கப்பட்ட (Dyed) அல்லது அச்சுவேலை செய்யப்பட்ட (Printed cloth) ஜவுளியில் மட்டில் மொத்த வியாபாரம் சில்லறை வியாபாரம் இரண்டும் செய்யும் வியா

பாரி இனி, தனியாக லைசென்சு கட்டணம் கட்டி, லைசென்சு வாங்கிக்கொண்டு வியாபாரம் செய்யவேண்டும். இனி ஜவுளி வியாபாரிகள் 6 வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். கீழ்க் கண்டவைகளில் எந்த வகை வியாபாரத்திற்கு லைசென்சு வேண்டுமென்று மனுவில் குறிப்பிட வேண்டும். அதாவது (1) சில்லறை வியாபாரம் (2) மொத்த வியாபாரம் (3.) மொத்த கன்சைனி (4) சாயம் அல்லது அச்சடிக்கப் பட்டஜவுளியில் மட்டில் மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் (5) அன்னிய நாட்டுத் துணியில் மட்டில் மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும் (6) இந்திய மில் ஜவுளியைத் தெருவில் விற்க "ஹாக்கர்" ஆக இருக்க-இவைகளில் எந்தவகை வியாபாரத்திற்கு லைசென்சு வேண்டும் என்று குறிப்பிடவேண்டும்.

(20-6-1950 சென்னை சர்க்கார் கெஜட்- பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட்- பக்கம் 63)

நூல் (வியாபாரிகள்) கட்டுப்பாடு உத்தரவு.

மில்களிலிருந்து நேராக நூல் வாங்கும் விசைத்தறி (Power loom factory) தொழிற் சாலைக்காரர்களும், பின்னல் (Hosiery) தொழிற்சாலைக்காரர்களும் "நூல் வியாபாரி" களாகக் கருதப்படுவார்கள் என்று இவ்வுத்தரவு திருத்தப்பட்டிருக்கிறது.

(27-6-1950 சென்னை சர்க்கார் கெஜட்- பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 65)

நூல் (வியாபாரிகள்) கட்டுப்பாடு உத்தரவின் திருத்தம்

சென்னை ராஜ்யத்திலுள்ள செம்படவர்களின் கோவாப்பரேடிவ் சொசைடிகளுக்கு நூல் வியாபாரத்திற்காகக் கொடுக்கப்படும் லைசென்சுக்கு 17-5-1950 முதல் இரண்டு வருஷங்களுக்கு யாதொரு லைசென்சு கட்டணமும் கிடையாதென்று விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

(4-7-1950 சென்னை சர்க்கார் கெஜட்- பாகம் 2 ரூல் சப்ளிமெண்ட் -பக்கம் 77)

காகிதக் கட்டுப்பாடு உத்தரவுகள் ரத்து

மத்திய சர்க்காரால் 24-6-1950 முதல் கீழ்க் கண்ட கண்ட்ரோல் உத்தரவுகள் ரத்து செய்யப் பட்டன :—

(1) 1945 ஆம் வருஷத்திய காகித (சிக்கன) கட்டுப்பாடு உத்தரவு (The Paper Control (Economy) order 1945

(2) 1944 ஆம் வருஷத்திய காகித (பங்கீடு) கட்டுப்பாடு உத்தரவு (The Paper Control (Distribution) order 1944)

(3) 1945 ஆம் வருஷத்திய காகித விலை கட்டுப்பாடு உத்தரவு—(The Paper Price Control order 1945)

(4) 1944 ஆம் வருஷத்திய காகித அட்டை விலை கட்டுப்பாடு உத்தரவு (The Paper Control (Prices of board) order 1944)

(11-7-1950 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II பக்கம் 872)

தொழிற்சாலைகளின் சட்ட இன்ஸ்பெக்டர்கள்.

கீழ்க்கண்ட அதிகாரிகளும், அவரவர் அதிகார எல்லைக்குள், தொழிற்சாலைகள் அடிஷனல் இன்ஸ்பெக்டர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். இவ்வதிகாரிகள் தொழிற்சாலைகளுக்குப் போய், அங்கே இருக்கும் ரிஜிஸ்டர்களையும் இடங்களையும் சோதனை செய்யவும், சட்டப்படி எல்லாம் இருக்கின்றனவா என்றும் பார்க்கலாம். அடிஷனல் இன்ஸ்பெக்டர்கள் :- (1) சென்னை டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் (2) உதவி டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் (3) ஜில்லா ஹெல்த் ஆபீசர்கள் (4) உதவி ஜில்லா ஹெல்த் ஆபீசர்கள் (5) முனிசிபல் ஹெல்த் ஆபீசர்கள் (6) சென்னை கார்ப்பரேஷன் ஹெல்த் ஆபீசர்களும் உதவி ஹெல்த் ஆபீசர்களும் (7) ஹெல்த் ஆபீசர்கள் இல்லாத முனிசிபாலிடிகளின் கமிஷனர்கள் (8) சென்னை போலீஸ் கமிஷனர்.

(20-6-1950 சென்னை சர்க்கார் கெஜட்— பாகம் I—பக்கம் 1930)

சென்னை ஜமீன்—இனாம் ஒழிப்புச் சட்ட விதி

இச்சட்டப்படி நியமிக்கப்படும் செட்டில்மெண்ட் ஆபீசர் தமக்குள்ள எல்லா அதிகாரங்களையுமோ அல்லது சில அதிகாரங்களையோ தம் எல்லைக்குள் அதிகாரமுள்ள எந்த உதவி செட்டில்மெண்ட் ஆபீசருக்கும் எழுத்து மூலம் மாற்றலாம்

என்று அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது.

(20-6-1950 சென்னை—சர்க்கார் கெஜட்—பாகம் I ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 252)

சிலோன் போக பாசும், புதுச்சேரி—காரைக் கால் போக அடையாளச் சீட்டும் கொடுக்க அதிகாரிகள்.

இதற்கு முன் உள்ள உத்தரவுகளை ரத்து செய்து, 6-4-1950 முதல் அமுலில் இருக்கும் படி சென்னை கவர்னர் அவர்களால் கீழ்க்கண்ட விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன:—

(1) சென்னை ராஜ்யத்திலுள்ள இந்தியப் பிரஜைகளுக்கும், இந்தியப் பாதுகாப்புக்குட் பட்டவர்களுக்கும் அன்னிய நாடுகள் போக 'பாஸ் போர்ட்'களும் (Pass ports) சிலோன் போக 'பாஸ்'களும் (India-Ceylon Passes) புதுச்சேரி காரைக்கால் இந்தப் பிரெஞ்சு இடங் களுக்குப் போய்வர 'அடையாளச்சீட்டும்' (Certificates of identity) கொடுக்க (சென்னை) ஹோம் டிபார்ட்மெண்ட் செக்ரடரி, டிப்டி செக்ரடரி, அடிஷனல் டிப்டி செக்ரடரி, இவர் களுக்கு அதிகாரம் உண்டு.

(2) அவரவர் அதிகார எல்லைக்குள் வசிக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு மட்டில் இந்தியா—சிலோன் 'பாஸ்'கள் (India-Ceylon Passes) கொடுக்க—(1) சென்னை போலீஸ் கமிஷனர் (2) சென்னை தவிர மற்ற எல்லா ஜில்லா கலெக்டர்கள் (3) ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களிலிருக்கும் எல்லா அடிஷனல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகள், டிரஷரி டிப்டி கலெக்டர்கள்—இவர்களுக்கும் அதிகாரம் உண்டு.

(3) அவரவர் அதிகார எல்லைக்குள் வசிக்கும் இந்தியப் பிரஜைகளுக்கு மட்டில் புதுச்சேரி-காரைக்கால் போய்வர அடையாளச் சீட்டுகள் (Certificates of identity) கொடுக்க:—

(1) சென்னை போலீஸ் கமிஷனர் (2) சென்னை தவிர மற்ற எல்லா ஜில்லா கலெக்டர்கள் (3) தென் ஆற்காடு, தஞ்சாவூர் ஜில்லாக்களிலுள்ள எல்லா அடிஷனல் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுகள், எல்லா ஸப்மாஜிஸ்ட்ரேட்டுகள்—இவர்களுக்கும் அதிகாரம் உண்டு.

(4) தென் இந்திய ரயில்வே நிர்வாகத்தால் நியமிக்கப்படும் ரயில்வே அதிகாரிகளுக்கும், ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டெண்ட்டுகளுக் கும் புதுச்சேரி-காரைக்கால் போய்வர, விசேஷ அடையாளச்சீட்டுகள் (Special Certificates of identity) வழங்க அதிகாரமுண்டு.

(5) பிரிட்டிஷ் அல்லது அன்னிய நாட்டின் அதிகாரிகளால் அக்கரை காண்பிக்கப்படாத வேறு அன்னியர்களுக்குப் பாஸ் போர்ட்டுகள் கொடுக்கவும், ஹோம்டிபார்ட்மெண்ட் செக்ரடரி டிப்டி செக்ரடரி, அடிஷனல் டிப்டி செக்ரடரி-இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

(4-7-1950 - சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 2223)

வக்கீல் பீசு ஜாடாவும் கொடுக்கும் வரை கக்ஷிக்காரரின் தஸ்தாவே ஜுகள் முதலியவற்றை அவரிடம் திருப்பிக் கொடுக்காமல் வக்கீல் வைத்துக் கொள்ளலாம்:

சென்னை ஹைகோர்ட்டாரின் அனுமதியின் பேரில் சென்னை பார் கவுன்சிலால் கீழ்க்கண்டபடி (பார் கவுன்சில் விதி 31, (ii) d என்று) ஒரு புதுவிதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது:— ஒரு வழக்கில், கட்சிக்காரர் தமது வக்கீலுக்குக் கொடுக்க வேண்டியதாக ஒப்புக் கொள்ளப் பட்ட ஜாடா வக்கீல் பீசையும் அக்கட்சிக் காரர் கொடுக்கும்வரை அக்கட்சிக்காரரின் தஸ்தாவேஜு முதலியவற்றை கட்சிக் காரரிடம் கொடுக்காமல் வக்கீலே வைத்துக் கொள்ள வக்கீலுக்கு உரிமை உண்டு என்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

(13-6-1950—சென்னை சர்க்கார் கெஜட் — பாகம் II ரூல் சப்ளிமெண்ட்—பக்கம் 62)

—



உலையில்

(இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாக வில்லை. ஆனால் இப்படிச் சட்டம் செய்ய சர்க்காரால் ஒரு மசோதா பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது.)

சென்னை ஜாகை - வாடகை கட்டுப்பாடு சட்டத் திருத்த மசோதா

சென்னை 1949 ஆம் வருட 25 ஆவது சட்டமாகிய ஜாகை-வாடகை கட்டுப்பாடு சட்டம் (The Madras Buildings-Lease and Rent Control - Act) 30–9–1950 உடன் அமுல் இழந்து விடும்படி இருப்பதால் அதை இன்னும் ஒரு வருஷம், அதாவது 30–9–1951 வரை நீடிக்கச் சென்னை சர்க்கார் ஒரு மசோதா பிரசுரம் செய்திருக்கின்றனர்.

மேலும் இச்சட்டத்தில் பல முக்கிய திருத்தங்களும் மாறுதல்களும் செய்ய ஒரு திருத்த மசோதாவும் சர்க்காரால் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இம் மசோதாவின் ஷரத்துக்கள் அப்படியே சட்டமானால்:—(1) வாடகைக்காரருக்கும் (tenants) அவருடைய உள் வாடகைக்காரருக்கும் (Sub-tenants) உள்ள பாத்தியங்களுக்கும் இச்சட்டத்தின் ஷரத்துக்களே உபயோகப்படுத்தப்படும். (2) மாத வாடகை ரூ. 15க்கு மேல் உள்ள கட்டடங்களோ, அதன் பாகங்களோ காலியானல் அதை அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். (இப்பொழுது ரூ. 30 வாடகைக்குமேல் வரும் கட்டடங்களைப்பற்றித் தான் தெரிவிக்க வேண்டும்) (3) பல கட்டடங்களின் சொந்தக்காரர் தம்முடைய சொந்த உபயோகத்திற்கு ஒரு கட்டடம் மட்டில் வைத்துக் கொண்டு மற்றவைகளை வாடகைக்கு விட்டுவிட வேண்டும். (4) கெடுப்படி வாடகை கொடுக்கத் தவறியவுடன் 'ரெண்ட் கண்ட்ரோலரி'டம் கட்டடத்தைக் காலிசெய்ய வேண்டுமென்று இப்பொழுது மனுப் போடலாம். திருத்தச் சட்டப்படி வாடகை கொடுக்கத் தவறியவருக்கு ஒரு ரிஜிஸ்டர் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதைப் பெற்றுக் கொண்ட 15 தினங்களுக்குள்ளும் குடியிருப்பவர் வாடகைத் தொகையைக் கொடுக்கலாம். வாடகைக் காரருக்கு நோட்டீஸ் கிடைத்த (அல்லது அவர் அதை வாங்கிக் கொள்ள மறுத்த) 15 தினங்கள் சென்ற பிறகுதான் (அதற்குள் அவர் வாடகை கொடுக்காவிட்டால்) ரெண்ட் கண்ட்ரோலருக்கு மனுக் கொடுக்க முடியும். (5) வாடகை கொடுப்பவருக்கு வீட்டுக்காரர் ரசீது கொடுக்கா விட்டால் 3 மாதத்திற்குள் குடியிருப்பவர் ரெண்ட் கண்ட்ரோலருக்கு 'கம்பிளெயின்ட்' கொடுக்கலாம். வீட்டுக்காரர் வாடகையைப் போல் இரண்டு மடங்கு அபராதம் கொடுக்க நேரிடும். (6) கட்டடக்காரர் வாடகை வாங்க மறுத்தாலும், கட்டடக் காரரின் இருப்பிடம் தெரியாவிட்டாலும் வாடகையை அதிகாரிகளிடம் கட்ட வசதி ஏற்படும். (7) புதிதாய் வீடு வாங்குபவர்கள் ஒரு வருஷம் சென்ற பிறகு தான் தம் சொந்த உபயோகத்திற்கு அவ்வீடு வேண்டுமென்று மனுப் போடமுடியும். (8) குடியிருப்பவர்மீது ஏற்படும் உத்தரவுகள் அவரிடம் உள்வாடகைக்கு இருப்பவர்களையும் கட்டுப்படுத்தும். (9) ரெண்ட்கண்ட்ரோலர் உத்தரவின் பேரில் ஏற்படும் அப்பீல் உத்தரவுகளை பரிசிலனை (Revision) செய்ய ஹைகோர்ட்டுக்கும் ஜில்லா கோர்ட்டுகளுக்கும் அதிகாரம் கொடுக்கப்படும். (10) சென்னை, இதர முனிசிபாலிடிகள் தவிர மற்ற இடங்களுக்கு இச்சட்டம் பூராவையுமோ, சில ஷரத்துக்களை மட்டுமோ அமுலுக்குக் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்படும். (11) இச்சட்டத்தை அனுசரித்து ஏற்படும் விதிகளின் ஷரத்துக்களை மீறுவதைக் குற்றமாகச் செய்து ரூ. 2000 வரை அபராதம் விதிக்கும்படி சர்க்கார் விதிகள் செய்யலாம். இன்னும் சில சில்லறை மாறுதல்களும் ஏற்படும்.

(18-7-50 சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் 4-A, பக்கம் 245.)

187698

PRINTED BY N. [illegible]ARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUPUVANAM, TIRUVADAMARUDUR, EDITED AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD.

கல்யாண ஸீஸனுக்கென்றே புதுப்புது டிஸைன்

பெங்களூர், காஞ்சிவரம், கும்பகோணம்

பட்டுச் சேலைகள்

ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம். தேவைக்கு உடனே முந்துங்கள்.

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத்தெரு, :: கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—மெ. மெ. வீதி, காரைக்குடி & காட்டரசன்கோட்டை

சாயத்திற்கு உத்திரவாதமுள்ள
அற்புத கலர்களில் கவர்ச்சிசெய்யும்பார்டர்கள்
முந்திகள் அமைந்த எமது சொந்த கைநெசவு
ஜரிகை பட்டு & நூல் சேலைகள்

வேண்டியவற்றிற்கு ஆர்டர் கொடுங்கள்.

பிரிட்டிஷ் எம்பயர் எக்ஸிபிஷனில் மெடல் சர்டிபிகேட் பெற்ற

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடலாயத்தெரு * கும்பகோணம்

கிளை :—20, லெக்ஷிமிபுரம் 2-வது தெரு, மதுரை.

Regd. No. M. 5399

V. S. & Sons

SWEETS

குணத்திலும்

மணத்திலும்

நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

தயாரிப்பவர்கள்.

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை

கும்பகோணம்

(Estd. 1925)